بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 6 | இதழ் 28

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

04 துல் ஹஜ்ஜா 1442 ஹிஜ்ரி கமரி 15 வஃபா 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 15 ஜூலை 2021

## அல்லாஹ்வின் கட்டளை

اَلَمْ تَعْلَمْ اَنَّ اللّٰهَ لَهٗ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِؕ يُعَذِّبُ مَنْ يَّشَآءُ وَيَغْفِرُ لِمَنْ يَّشَآءُؕ وَاللّٰهُ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ ○

வானங்கள் பூமி ஆகியவற்றின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது என்று உமக்குத் தெரியாதா? அவன் விரும்புபவருக்குத் தண்டனை கொடுக்கின்றான். விரும்புபவரை மன்னித்தும் விடுகின்றான். மேலும் அல்லாஹ் எல்லாவற்றிற்கும் முழுமையான ஆற்றல் பெற்றவனாவான். (5:41)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**காகிதங்களின் தாக்கம் என்ன உள்ளது. ஒரு நாள் இருக்கும். ஒரு நேரத்தில் வீணாகி விடுகின்றது. ஆனால் வானத்தில் எழுதப்படுபவை எல்லாம் ஒருபோதும் அழிய முடியாது. அதன் தாக்கம் நிரந்தரமாக இருக்கின்றது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### பொருள் தியாகம் அல்லாஹ்விற்காக மட்டுமே செய்யப்பட வேண்டும்

ஒரு நபர் அவரது பெயர் வெளியிடப்பட வேண்டும் என்ற நோக்கில் எமது மார்க்கத் தேவைகளில் பங்கு கொள்கின்றார் அல்லது சந்தா கொடுக்கின்றார் என்றால் நிச்சயமாக புரிந்து கொள்ளுங்கள். அவர் உலகத்தின் புகழ் மற்றும் பெயருக்காக ஆசைப்படுகின்றார். ஆனால் எவர் அல்லாஹ்விற்காக மட்டும் இவ்வழியில் அடியெடுத்து வைக்கின்றாரோ மேலும் மார்க்கத் தொண்டிற்காக எப்பொழுதும் தயாராக இருக்கின்றாரோ அவர் இந்த விஷயங்களை சற்றும் பொருட்படுத்துவதில்லை. உலகின் புகழ் என்பது சிறிதளவு உண்மைத்துவத்தையும், தாக்கத்தையும் கூட தன்னுள் கொண்டிருப்பதில்லை. வானத்தில் எழுதப்படும் பெயரே சிறந்ததாக இருக்கின்றது. பொருள் தியாகம் அல்லாஹ்விற்காக மட்டுமே செய்யப்பட வேண்டும். என்னுடைய ஏராளமான கலப்பற்ற நண்பர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்களை உங்களில் மிகக் குறைவானவர்களே அறிவார்கள். ஆனால் அவர்கள் எப்பொழுதும் எனக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். உதாரணத்திற்காக நான் கூறுகின்றேன். மிர்ஸா யூசுப் பேக் சாஹிப் என்னுடைய மிகவும் கலப்பற்ற உண்மையான நண்பர் ஆவார். நான் அன்னாரின் பெயரை இங்கு ஏன் குறிப்பிடுகின்றேன்? என்றால் இதன் மூலம் சகோதரர்களுக்கு மத்தியில் அறிமுகம் அதிகரிக்கும். அன்பும் உருவாகி விடும். நான் தனிமையில் வாழ்க்கையை நடத்தி வந்த காலத்திலிருந்து மிர்ஸா சாஹிப் என்னுடன் தொடர்பு வைத்துள்ளார்கள். அவர்களின் உள்ளம் நேசத்தாலும், கலப்பற்ற தன்மையாலும் நிறைந்துள்ளதை நான் பார்க்கின்றேன். மேலும் அவர்கள் எப்போதும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்காக தன்னுள் ஓர் உணர்வை கொண்டுள்ளார்கள். அதேபோன்று இன்னும் ஏராளமான அன்பர்களும், நண்பர்களும் உள்ளனர். அவர்கள் அனைவரும் தத்தமது ஈமான் மற்றும் இறைஞானத்திற்கேற்ப கலப்பற்ற தன்மையிலும் அன்பின் உணர்வாலும் நிறைந்துள்ளனர்.

### ஈமான் உறுதியாக இல்லாத வரை எதுவும் நடக்காது

நற்செயலுக்கான நற்பேறு படிப்படியாகவே கிடைக்கின்றன என்பதை நான் அறிகின்றேன். ஆயினும் ஈமானில் வலிமை ஏற்படும் அதே அளவிற்கு செயல்களிலும் வலிமை வந்து விடுகின்றது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எந்த அளவுக்கு என்றால் இந்த ஈமானிய ஆற்றல் முழுமையாக வளர்ந்து விடும்போது பின்னர் அப்படிப்பட்ட நம்பிக்கையாளர் ஷஹீதின் அந்தஸ்தைப் பெறுகின்றார். ஏனென்றால் எந்தவொரு விவகாரமும் அவரது வழியில் தடைக்கல்லாக நிற்க முடியாது. அவர் தமது விருப்பத்திற்குரிய உயிரையும் கொடுப்பதற்கு தாமதிப்பதுமில்லை; தயங்குவதும் இல்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 309, 310 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**ஒரு காலத்தில் இஸ்லாம் நிராகரிப்பை தின்று கொண்டிருந்தது. இன்று நிராகரிப்பு இஸ்லாத்தை தின்று கொண்டிருக்கின்றது**

**அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அறிவை வழங்குவானாக. அவர்கள் தமது குறையை இஸ்லாத்தின் பக்கம் சுட்டிக் காட்டக்கூடாது. அவர்கள் சுயமே சரிவர அமல் செய்வதில்லை. ஆனால் (தமது செயல்களின்) தவறான விளைவை திருக்குர்ஆனின் பக்கம் சுட்டிக் காட்டுகின்றனர்**

وَاِذْ تَاَذَّنَ رَبُّكُمْ لَئِنْ شَكَرْتُمْ لَاَزِيْدَنَّكُمْ وَلَئِنْ كَفَرْتُمْ اِنَّ عَذَابِىْ لَشَدِيْدٌ என்ற சூரா இப்ராஹீம் வசனம் 8ற்கு விளக்கவுரை வழங்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அனைத்து முன்னேற்றங்களும் நன்றியுடன் தொடர்புடையவையாக உள்ளன என்ற ஒரு மகத்துவமிக்க சட்டம் இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ளது. அதிகார சொற்பொருளில் எடுத்துரைக்கப்பட்டதுபோன்று நன்றி என்பது கருணையை ஒப்புக் கொள்வது மற்றும் கருணை செய்தவரின் புகழை எடுத்துரைப்பதாகும். மனிதன் அவனுக்கு வழங்கப்பட்ட விஷயங்களை சிறப்புடனும் உரிய இடத்திலும் பயன்படுத்துவது தான் அல்லாஹ்விற்கு மனிதன் செய்கின்ற நன்றியாகும். ஒரு நபர் ஒருவர் கொடுத்த பொருளை பயன்படுத்தவில்லை என்றால் பின்னர் அவர் புகழ்வது என்பது வெறும் சொல்லால் ஆன புகழ்ச்சியாக இருக்கும். நன்றியாக இருக்காது. சரியான பயன்பாடும், சரியான செலவீனமும் நன்றி செலுத்த அவசியமாகும். இந்த சட்டம் தான் அனைத்து முன்னேற்றங்களுக்கும் உரிய வழியாகும். அறிவு சரியாக பயன்படுத்தப்பட்டால் பின்னர் நிச்சயம் அறிவு அதிகரிக்கும். கண், கை, மூக்கு, காது சுருக்கமாக எந்த உறுப்பை சரியாக பயன்படுத்தினாலும் அது நிச்சயம் முன்னேற்றம் அடையும். இது பொதுவான ஒரு சட்டம் ஆகும். இதில் இந்து, முஸ்லிம், கிருஸ்துவர் என்று எந்த வேறுபாடும் கிடையாது. முஸ்லிம்கள் செல்வத்தை சரியாக பயன்படுத்தவில்லை. எனவே அவர்கள் வீழ்ச்சி அடைகின்றார்கள். ஆனால் இந்துக்கள் அதனை சரியாக பயன்படுத்துகின்ற காரணத்தால் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கின்றனர். ஆன்மீகத்திலும் இதுவே நிலையாகும். திருக்குர்ஆனைப் பாருங்கள். முஸ்லிம்கள் அதனை சரியான முறையில் பயன்படுத்தி இருந்தால் தத்துவங்களும், பகுத்தறிவுகளும், கிறிஸ்துவமும், யூதம் போன்ற எந்த மார்க்கமும் இஸ்லாத்திற்கு எதிரில் நிற்க முடியாது. ஆனால் இன்று வேதமும், தவ்ராத்தும், இஞ்ஜீலும் ஒவ்வொன்றும் தம்மைத்தாமே முன்னிறுத்தி வருகின்றன. மேலும் மற்றொரு பக்கம் பகுத்தறிவு சிந்தனைகள் அதன் மீது தாக்குதல் தொடுக்கின்றன. ஒரு காலத்தில் இஸ்லாம் நிராகரிப்பை தின்று கொண்டிருந்தது. இன்று நிராகரிப்பு இஸ்லாத்தை தின்று கொண்டிருக்கின்றது. இஸ்லாத்தின் இந்த கட்டளையும் செயல்படத்தக்கதல்ல, அந்தக் கட்டளையும் செயல்படத்தக்கதல்ல என்று இஸ்லாத்தைப் பற்றி முஸ்லிம்களே கூறி வரும்போது பின்னர் அதில் என்ன எஞ்சியிருக்கின்றது. அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அறிவை வழங்குவானாக. அவர்கள் தமது குறையை இஸ்லாத்தின் பக்கம் சுட்டிக் காட்டக்கூடாது. அவர்கள் சுயமே சரிவர அமல் செய்வதில்லை. ஆனால் (தமது செயல்களின்) தவறான விளைவை திருக்குர்ஆனின் பக்கம் சுட்டிக் காட்டுகின்றனர். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 447 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்பு**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 11 மே 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **11 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றி எடுத்துரைக்கப்படும்போது ஹுதைபியா உடன்படிக்கை பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது. அதைக்குறித்து இவ்வாறும் வருகிறது. குரைஷியர்களின் நட்புக் கோத்திரமான பனு பக்ர் ஹுதைபியா சமாதான உடன்படிக்கைக்கு எதிராக நடந்தவாறு முஸ்லிம்களின் நட்புக்கோத்திரமான பனு குஸாஆ கோத்திரத்தின் மீது தாக்குதல் தொடுத்தனர். அப்போது குரைஷியர்கள் ஆயுதங்கள் மற்றும் வாகனங்கள் மூலமாக பனு பக்ருக்கு உதவி செய்தனர். ஹுதைபியா சமாதான உடன்படிக்கையை அவர்கள் மதிக்கவில்லை. அப்போது அபூசுஃப்யான் மதீனாவிற்கு வந்தார். ஹுதைபியா சமாதான உடன்படிக்கையை புதுப்பிக்க விரும்பினார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றார். ஆனால் அன்னார் (ஸல்) அவர்களோ அவருடைய எந்த விஷயத்திற்கும் பதிலளிக்கவில்லை. பிறகு அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்று, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் பேசுமாறு கூறினார். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், நான் அவ்வாறு செய்ய மாட்டேன் என்று கூறி விட்டார்கள். பிறகு அபூசுஃப்யான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வந்து பேசினார். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்று உமக்கு பரிந்துரை செய்ய வேண்டுமா? இறைவன் மீது ஆணையாக! என்னிடத்தில் ஒரு துரும்பு இருந்தாலும் கூட அதைக் கொண்டு உங்களுடன் நான் போர் புரிவேன் என்று பதிலளித்தார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 735 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல்காமில் ஃபித்தாரீக் தொகுதி 2 பக்கம் 115 – 2021 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மக்கா வெற்றியைப் பற்றி எடுத்துரைத்தவாறு டாக்ர் அலி பின் சலாபி அவர்கள் எழுதுகிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மர்ருஸ் ஸுஹ்ரான் (என்ற இடத்தை) சென்றடைந்தபோது அபூசுஃப்யானுக்கு தம்மைக்கு குறித்து கவலை ஏற்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அடைக்கலம் தேடுமாறு அபூசுஃப்யானுக்கு ஆலோசனை வழங்கினார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் அபூசுஃப்யானைப் பார்த்து உமக்கு கேடு உண்டாகட்டுமாக. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களிடத்தில் இருப்பதை பாரும் என்று கூறினேன். அதற்கு அபூசுஃப்யான் என்னுடைய தாய் தந்தையர் உம்மீது அர்ப்பணமாகட்டுமாக. இதிலிருந்து தப்பித்துக் கொள்ள என்ன வழி என்று கேட்டார். நான் அவரிடம் அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்கள் உம்மை சிறைபிடித்து விட்டால் நிச்சயமாக உம்மைக் கொன்று விடுவர். எனக்குப் பின்னால் கோவேரிக் கழுதையில் அமர்ந்து கொண்டு பயணம் செய்யுங்கள். நான் உங்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அழைத்துச் செல்கின்றேன். பிறகு நான் உங்களுக்கு அன்னாரிடம் பாதுகாப்பு வேண்டுவேன் என்று கூறினேன். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அவர் என் பின்னால் அமர்ந்து பயணிக்கலானார். நான் முஸ்லிம்கள் மூட்டியுள்ள நெருப்பை கடக்கும் போதெல்லாம் இது யார்? என்று என்னிடம் கேட்பார்கள். அது இரவு நேரமாக இருந்தது. தீ மூட்டப்பட்டிருந்தது. அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கோவேரிக் கழுதையில் நான் பயணிப்பதைக் காணும்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர் அன்னாருடைய கோவேரிக் கழுதையில் அமர்ந்திருக்கின்றார் என்று கூறுவார்கள். இவ்வாறே நாங்கள் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் நெருப்பை கடந்து செல்லும்போது இது யார் என்று கேட்டவாறு எனக்கு அருகில் வந்து அன்னார் நின்றார்கள்.

அவர்கள் அபூசுஃப்யானை கண்டபோது இது அல்லாஹ்வின் பகைவன் அபூசுஃப்யான் என்று கூறியவாறு எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன் எவ்வித வாக்குறுதி உடன்படிக்கையுமின்றி உம்மீது (எங்களுக்கு) வெற்றியை வழங்கினான் என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூசுஃப்யானை இழுத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் அன்னாரிடம் வந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இவருடைய தலையை சீவ எனக்கு அனுமதி தாருங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் இவருக்கு அடைக்கலம் கொடுத்துள்ளேன் என்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், தம்முடைய விஷயத்தில் பிடிவாதம் பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்டு, உமரே! பாருங்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! இவருடைய தொடர்பு பனு அதீவுடன் இருந்தால் நீங்கள் இவ்வாறு நடந்து கொண்டிருக்க மாட்டீர்கள். இவர் பனு அப்தே மனாஃபை சார்ந்தவர் என்பதை நீங்கள் அறிவீர்கள் என்று நான் கூறினேன். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அப்பாஸே! (கொஞ்சம் நில்லுங்கள்). அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட போது எனக்கு எந்த அளவு மகிழ்ச்சி ஏற்பட்டதென்றால் எனது தந்தை கத்தாப் ஈமான் கொண்டிருந்தாலும் அந்த அளவுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்காது. கத்தாப் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதை விடவும் நீங்கள் ஈமான் கொண்டது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அதிக நேசத்திற்குரியதாக இருந்ததை நான் அறிவேன் என்றார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அப்பாஸே! அபூசுஃப்யானை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். காலையில் அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள்.

(அலி முஹம்மத் அஸ்லாபி அவர்கள் எழுதிய உமர் பின் கத்தாப் (ரலி) என்ற நூல் பக்கம் 51 – 2007 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) ஆகியோருக்கிடையில் இந்த உரையாடல் நடந்து கொண்டிருந்தது.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

இறுதியில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களைப் பார்த்து அவரை அழைத்துச் செல்லுங்கள். அடைக்கலம் கொடுத்து விட்டீர்கள் என்றால் அழைத்துச் செல்லுங்கள். அவரிடம் ஒன்றும் சொல்ல வேண்டாம் என்று கூறினார்கள்.

அபூபக்ர் பின் அப்துர் ரஹ்மான் அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டு ஷுஃபான் மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களை 30 நபர்களுடன் ஒரு போருக்கு அனுப்பி வைத்தார்கள். துர்பாவில் ஹவாஸுன் கோத்திரத்தின் ஒரு கிளையை நோக்கி அனுப்பி வைத்தார்கள். துர்பா என்பது மக்காவிலிருந்து இரண்டு நாள் பயண தொலைவிலுள்ள ஒரு பள்ளத்தாக்கின் பெயராகும். அங்கு பனு ஹவாஸுன் குடியிருந்தார்கள். இரண்டு நாள் பயண தொலைவு என்று கூறப்படும்போது முற்காலத்தில் குதிரை, ஒட்டகம் போன்ற பயண வாகனங்களை கருத்தில் கொண்டவாறு கூறப்பட்டுள்ளது.

புரீதா அஸ்லமியிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், கைபர் வாசிகளின் மைதானத்தில் இறங்கியபோது ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுக்கு கொடியை வழங்கினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 206 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சீரத் நூலில் எழுதப்பட்டுள்ளதாவது முதல் முறையாக கைபர் போரில் கொடியை பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அதற்கு முன்பு சிறு கொடிகள் தான் இருந்தன. புரைரா அஸ்லமியிடமிருந்து அறிவிக்கப்பட்டது பற்றி கூறப்பட்டு வந்தது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கைபர்வாசிகளின் மைதானத்தில் இறங்கியபோது ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுக்கு கொடியை வழங்கினார்கள். அடுத்ததாக இதன் விளக்கம் வருகிறது. அதாவது வரலாற்று நூல்களில் முதல் முறையாக கைபர் போரின் கொடியைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அதாவது பெரிய கொடியைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அதற்கு முன்பு சிறு கொடிகள் தான் இருந்தன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடி கருப்பு நிறத்தை உடையதாக இருந்தது. அது உம்முல் மூமினீன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் போர்வையிலிருந்து உருவாக்கப்பட்டிருந்தது. அதனுடைய பெயர் உகாபாக இருந்தது. அன்னாருடைய இன்னொரு கொடி வெள்ளை நிறத்தை உடையதாக இருந்தது. அதை அன்னார் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு வழங்கியிருந்தார்கள். முதலில் கூறப்பட்ட கொடி கருப்பு நிறத்தை உடையது. அது உம்முல் மூமினீனின் போர்வையால் தயாரிக்கப்பட்டிருந்தது. அடுத்ததாக இரண்டாவது கொடியைப் பற்றி கூறப்படுகிறது. இது வெள்ளை நிறத்தை உடையது. இதை அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு வழங்கினார்கள். ஒரு கொடியை அன்னார் கபாப் பின் முன்ஸிர் அவர்களுக்கும், இன்னொரு கொடியை ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) அவர்களுக்கும் வழங்கியிருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கைபருக்கு வந்தபோது அன்னாருக்கு ஒற்றை தலை வலி உண்டாயிற்று. ஆகவே அன்னார் வெளியே வர இயலவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் அன்னார் முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு தனது கொடியை கொடுத்தார்கள். பிறகு அதே கொடியை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு வழங்கினார்கள். அந்நாளில் கடுமையான போர் நடைபெற்றது. ஆயினும் முஸ்லிம்களால் கோட்டையை வெற்றி கொள்ள இயலவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவர் மூலமாக அல்லாஹ் வெற்றியை வழங்க இருக்கின்றானோ அவருக்கு நான் கொடியை கொடுப்பேன் என்று கூறினார்கள். ஆகவே அடுத்த நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு கொடியை வழங்கினார்கள். அவர்களின் கைகளில் அல்லாஹ் வெற்றியை வழங்கினான்.

(சுபுலுல் ஹுதா வர்ஷாத் தொகுதி 5 பக்கம் 120, 124, 125 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இப்னு இஸ்ஹாக் கூறுகிறார்கள்: இப்னு ஷஹாப் ஸுஹ்ரியிடம் ஹுஸூர் (ஸல்) அவர்கள் கைபரின் பேரீத்தம் பழ தோட்டங்களை எந்த நிபந்தனையின் கீழ் யூதர்களுக்கு கொடுத்தார்கள் என்று நான் கேட்டேன். அதற்கு ஸுஹ்ரி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போருக்குப் பிறகு கைபரை வெற்றி கொண்டார்கள். மேலும் கைபர் என்பது போருக்குப் பிறகு கிடைத்த செல்வமாக இருந்தது. அதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கியிருந்தான். அதனுடைய ஐந்தாவது பங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குரியதாக இருந்தது. அதை அன்னார் முஸ்லிம்களிடத்தில் பங்கிட்டுக் கொடுத்தார்கள். சண்டைக்குப் பிறகு யூதர்களில் எவர்கள் நாடு கடத்தப்படுவதற்கு ஒப்புக் கொண்டு தமது கோட்டையை விட்டு இறங்கி வந்தார்களோ அவர்களை அழைத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் விரும்பினால் ஒரு நிபந்தனையின் கீழ் இந்த செல்வங்கள் உங்களிடத்தில் ஒப்படைக்கப்படும். அது என்னவென்றால், நீங்கள் அவற்றில் வேலை செய்ய வேண்டும். அதன் பழங்கள் எங்களுக்கும் உங்களுக்குமிடையில் பங்கிடப்படும் என்று கூறினார்கள். இந்த சொத்தில் பங்கீட்டின் அடிப்படையில் வேலை செய்ய வேண்டும். நீங்கள் விரும்பினால் இங்கு இருக்கலாம். அல்லாஹ் உங்களை எங்கு தங்க வைக்க விரும்பினானோ அங்கு நான் உங்களை தங்க வைப்பேன் என்று கூறினார்கள். இதை யூதர்கள் ஏற்றுக் கொண்டார்கள். மேலும் யூதர்கள் அதில் வேலை செய்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களை அவர்களிடத்தில் அனுப்பி வைத்து வந்தார்கள். அன்னார் அந்த தோட்டங்களின் பழங்களை பங்கீடு செய்து வந்தார்கள். யூதர்களுக்கு பழங்களை கணிப்பதில் நீதியுடன் அன்னார் நடந்து கொண்டார்கள். நல்ல பழங்களை அன்னார் தமக்காக வைத்துக் கொள்ளவில்லை. மாறாக, நீதியுடன் பங்கீடு செய்யப்பட்டது.

பிறகு அல்லாஹ் தனது நபிக்கு மரணத்தை தந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் போன்றே யூதர்களுடன் நடந்து கொண்டார்கள். இவ்வாறே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தம்முடைய கிலாஃபத்தின் ஆரம்ப காலத்தில் நடந்து கொண்டார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஒரு விஷயம் தெரிய வந்தது. அது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த நோயில் இறந்து போனார்களோ அந்த நோயில் அரபு தீபகற்பத்தில் இரு மார்க்கங்கள் ஒன்றாக இருக்காது என்று கூறியிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இதைக்குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த விஷயம் உறுதியானவுடன் உங்களை நாடு கடத்துவது குறித்து அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான் என்று கைபருடைய யூதர்களுக்கு எழுதினார்கள்.

அரபு தீப கற்பத்தில் இரு மார்க்கங்கள் ஒன்றாக இருக்காது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக எனக்கு செய்தி கிடைத்துள்ளது. ஆகவே யூதர்கள் எவர்களிடத்திலாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஏதேனும் ஒப்பந்தம் இருக்குமென்றால் அதை அவர் என்னிடத்தில் கொண்டு வரட்டும். அதை நான் அவருக்கு செயல்படுத்தி விடுவேன். எவரிடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எந்த ஒப்பந்தமும் இல்லையோ அவர் நாடு கடத்தப்படுவதற்கு ஆயத்தமாக இருக்கட்டும் என்று கூறினார்கள். ஏதேனும் ஒப்பந்தம் கிடைக்கப்பட்டிருந்தால், தங்கி இருப்பதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏதேனும் வாக்குறுதி அளித்திருந்தாலும் சரி அதை நான் பூர்த்தி செய்வேன். ஆனால் அவ்வாறு இல்லையென்றால் நீங்கள் இந்த இடத்தை விட்டு விட வேண்டும். ஆகவே எவர்களிடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எந்த ஒப்பந்தமும் இல்லையோ அவர்களை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நாடு கடத்தினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) கூறுகின்றார்கள்: நானும் ஹஸ்ரத் சுபைர் பின் அவ்வாம் (ரலி) மற்றும் ஹஸ்ரத் மிக்தாத் பின் அஸ்வத் (ரலி) அவர்களும் கைபரில் எங்களுடைய செல்வங்களை காணச் சென்றோம். அங்கு சென்றடைந்த பிறகு நாங்கள் தனித்தனியாக எங்களை செல்வங்களை காணச் சென்றோம். இரவு நேரத்தில் நான் எனது படுக்கையில் தூங்கிக் கொண்டிருக்கும்போது என்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. எனது தோள்பட்டைகளின் இணைப்பு முழங்கையுடன் இறங்கி விட்டது. காலையில் எனது இரு தோழர்களும் கூக்குரல் இட்டவாறு என்னிடத்தில் வந்து உம்மை யார் இவ்வாறு செய்தது? என்று கேட்டார்கள். எனக்கு தெரியாது என்று நான் கூறினேன். அவ்விருவரும் எனது கைகளை சரி செய்தனர். பின்னர் என்னை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் அழைத்துச் சென்றனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இது யூதர்களின் வேலை என்று கூறினார்கள். பிறகு அன்னார் மக்களிடம் உரையாற்றுவதற்காக எழுந்து நின்றார்கள். (அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள்).

அன்னார் கூறினார்கள்: மக்களே! நாம் விரும்பும்போது அவர்களை வெளியேற்றுவோம் என்ற நிபந்தனையின் அடிப்படையில் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒப்பந்தம் செய்திருந்தார்கள். இப்போது யூதர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமரை தாக்கி இருக்கின்றார்கள். அவருடைய கைகளின் இணைப்பை அகற்றி இருக்கின்றார்கள். இந்த விஷயம் உங்களை வந்தடைந்து விட்டது. இதற்கு முன்பு அன்ஸார் மீதும் அவர்கள் தாக்குதல் நடத்தி இருந்தார்கள். அது அவர்களின் தோழர்கள் தான் என்பதில் நமக்கு எந்த சந்தேகமும் இல்லை. இங்கு அவர்களைத் தவிர நமக்கு வேறு எந்த எதிரியும் இல்லை. ஆகவே எவருக்கு கைபரில் ஏதேனும் சொத்து இருக்குமோ அதை அவர் பராமரித்துக் கொள்ளட்டும். ஏனென்றால் நான் யூதர்களை வெளியேற்றப் போகின்றேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அம்மக்களை வெளியேற்றி விட்டார்கள்.

அப்துல்லாஹ் பின் மக்னஃப் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் யூதர்களை கைபரிலிருந்து வெளியேற்றியபோது அன்ஸார் மற்றும் முஹாஜிர்களுடன் அன்னாரும் பயணித்தார்கள். அன்னாருடன் ஹஸ்ரத் ஜப்பார் பின் ஸஹ்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் யஸீப் பின் ஸாபித் (ரலி) அவர்களும் புறப்பட்டார்கள். ஹஸ்ரத் ஜப்பார் (ரலி) அவர்கள் மதீனாவாசிகளுக்காக பழங்களை கணித்துக் கூறுபவராகவும் அவர்களின் கணக்காளராகவும் இருந்தார்கள். அவ்விருவரும் கைபரை அதன் உரிமையாளர்களுக்கிடையில் முன்பு பங்கிடப்படப்பட்டிருந்ததைப் போன்றே பங்கிட்டு கொடுத்தனர்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 710 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஹாதிப் (ரலி) அவர்கள் தொடர்பாக ஒரு சம்பவம் உள்ளது. அவர்கள் ஒரு பெண்ணிடம் கடிதத்தைக் கொடுத்து மக்காவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அவர்கள் கடிதம் கொடுத்து அனுப்பி மறைமுகமாக மக்காவின் முஷ்ரிக்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சில நோக்கங்களைக் குறித்து செய்தி அனுப்பினார்கள். இது குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வின் புறமிருந்து தகவல் தெரிவிக்கப்பட்டது. அன்னார் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை அனுப்பி வைத்தார்கள். அந்தப் பெண் வழியிலேயே பிடிபட்டு விட்டாள். அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹாதிபிடம் விசாரித்தபோது அவர் தமது காரணத்தை கூறினார். ஈமானில் எனக்கு எவ்வித தடுமாற்றமும் இல்லை. என்னுடைய ஈமான் முழுமையானது என்று தனது ஈமானைக் குறித்து கூறினார். ஹஸ்ரத் ஹாதிப் (ரலி) அவர்கள் அதை உறுதிபட கூறினார்கள். ஆகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இந்த நயவஞ்சகரின் தலையை சீவ எனக்கு அனுமதி தாருங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர் பத்ர் போரில் கலந்து கொண்டுள்ளார். உங்களுக்கு என்ன தெரியும்? பத்ரில் கலந்து கொண்டவர்களை அல்லாஹ் எட்டிப் பார்த்துள்ளான். மேலும் நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். நான் உங்களுடைய பாவங்களை திரையிட்டு மறைத்து மன்னித்து விட்டேன் என்று அல்லாஹ் அவர்களிடம் கூறியுள்ளான் என்றார்கள்.

(புகாரி, கிதாபுல் மகாஸி பாப் கஸ்வா ஃபத்ஹ் ஹதீஸ் எண் 4274)

இன்னொரு சம்பவமும் உள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அதனுடன் நேரடியான தொடர்பு இல்லை தான். ஆனால் அதில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைக் குறித்தும் கூறப்பட்டுள்ளது. ஆகவே அதை எடுத்துரைக்கின்றேன். ஹஸ்ரத் அபூ கதாதா (ரலி)கூறுகின்றார்கள்: ஹுனைன் சம்பவம் நடந்தபோது நான் ஒரு முஸ்லிமைப் பார்த்தேன். அவர் ஒரு இணை வைப்பவருடன் போரிட்டுக் கொண்டிருந்தார். இன்னொரு முஷ்ரிக் ஏமாற்றி மறைந்து பின்னால் இருந்து அவர் மீது தாக்குதல் தொடுத்து அவரை கொல்ல நினைத்தார். ஒரு முஸ்லிமை இவ்வாறு ஏமாற்றி கொல்ல நினைத்த அந்த நபரை நோக்கி நான் வேகமாக விரைந்தேன். அவர் என்னை கொல்வதற்காக தமது கையை உயர்த்தினார். நான் அவருடைய கை மீது வாள் வீசி அதை வெட்டி விட்டேன். அதன் பிறகு அவன் என்னைப் பிடித்துக் கொண்டான். மேலும் எந்த அளவு என்னை நெரித்தான் என்றால் நான் செயலிழந்து போய் விட்டேன். பின்னர் அவன் தளர்ந்து விட்டபோது அவன் என்னை விட்டு விட்டான். நான் அவனை தள்ளி விட்டு அவனை கொன்று விட்டேன். இங்கு என்ன நிலை ஏற்பட்டிருந்தது என்றால் முஸ்லிம்கள் தோல்வியுற்று ஓடி விட்டனர். நானும் அவர்களுடன் ஓடி விட்டேன். ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் மக்களிடையே இருப்பதை நான் கண்டேன். மக்களுக்கு என்னவாயிற்று?

அவர்கள் ஏன் ஓடி விட்டார்கள் என்று கேட்டேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் நாட்டம் என்று கூறினார்கள். பிறகு மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் திரும்பி வந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எவர் ஒருவர் கொல்லப்பட்ட ஒருவரைக் குறித்து அவர் அந்த நபரைக் கொன்றார் என்று சான்று தருவாரோ அவருக்கு அதாவது கொன்றவருக்கு கொல்லப்பட்டவரின் பொருட்கள் வழங்கப்படும் என்று கூறினார்கள். என்னால் கொல்லப்பட்டவர் குறித்து ஏதேனும் சாட்சி கிடைக்குமா? என்று நான் தேட எழுந்தேன். ஆனால் எனக்கு சாட்சி கூறுவதற்கு யாரும் கிடைக்கவில்லை. ஆகவே நான் அமர்ந்து விட்டேன். பிறகு கொல்லப்பட்டவரின் சம்பவத்தை நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கூறினேன். அன்னாருடன் அமர்ந்திருப்பவர்களில் ஒருவர் கூறினார்: இவர் எவரைப் பற்றி கூறுகின்றாரோ அவருடைய ஆயுதங்கள் என்னிடம் உள்ளன. தாங்கள் அந்த ஆயுதங்களுக்கு பகரமாக ஏதேனும் கொடுத்து சமாதானம் செய்து கொள்ளுங்கள் என்றார். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு ஒருபோதும் நடக்காது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குரைஷிகளின் ஒரு சாதாரண நபருக்கு அவருடைய பொருட்களை வாங்கிக் கொடுத்து விட்டு அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் சார்பாக போரிடும் அல்லாஹ்வின் சிங்கங்களில் ஒரு சிங்கத்தை அன்னார் விட்டு விட மாட்டார்கள்.

ஹஸ்ரத் அபூ கதாதா (ரலி) கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து நின்றார்கள். அன்னார் எனக்கு அந்தப் பொருட்களை கிடைக்கச் செய்தார்கள். நான் அதைக் கொண்டு ஒரு சிறிய பேரீத்தம் பழ தோட்டத்தை வாங்கினேன். இது நான் இஸ்லாத்தில் உருவாக்கிய முதல் சொத்து மற்றும் செல்வமாக இருந்தது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி.... ஹதீஸ் எண் 4322)

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நாங்கள் ஹுனைனிலிருந்து திரும்பும்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் தாம் அறியாமை காலத்தில் நேர்ந்த ஒரு விஷயத்தைக் குறித்து கேட்டார்கள். அதாவது இஃதிகாஃப் இருப்பதைக் குறித்து கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நேர்ந்த அவ்விஷயத்தை முழுமை செய்யுமாறு கூறினார்கள.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி.... ஹதீஸ் எண் 4320)

அறியாமைக் காலத்தில் அது நேர்ந்துக் கொள்ளப்பட்டாலும் அதை பூர்த்தி செய்யுங்கள் என்று கூறினார்கள். இஸ்லாமிய போதனைக்கு உட்பட்டவாறு என்ன நிபந்தனை உள்ளதோ அதை பூர்த்தி செய்வது அவசியமாகும். இதனுடன் இந்த நிபந்தனையும் உள்ளது.

தபூக் போரில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பங்கு என்ன? என்பதைக் குறித்து கூறப்பட்டுள்ளது. தபூக் போரின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சார்பாக சந்தாவுக்கான ஒரு குறிப்பான கோரிக்கை வைக்கப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது சம்பவத்தை எடுத்துரைக்கின்றார்கள். ஒரு நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடத்தில் சதகா கொடுக்குமாறு கூறினார்கள். அப்போது தன்னிடம் செல்வம் இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை என்றாவது முந்திச் செல்ல முடியுமென்றால் அது இன்று முடியும் என்று நான் கூறிக் கொண்டேன். ஆகவே நான் எனது பாதி செல்வத்தை கொண்டு வந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் உமது குடும்பத்திற்காக என்ன மீதம் வைத்து விட்டு வந்துள்ளீர்கள்? எனக் கேட்டார்கள். எவ்வளவு கொண்டு வந்துள்ளேனோ அவ்வளவு வீட்டில் விட்டு வந்துள்ளேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தம்மிடமிருந்த அனைத்தையும் கொண்டு வந்தார்கள். நானோ பாதியை கொண்டு வந்திருந்தேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களோ இருந்ததையெல்லாம் கொண்ட வந்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடமும், உமது குடும்பத்திற்காக எதனை விட்டு விட்டு வந்துள்ளீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர் அல்லாஹ் மற்றும் அவனது தூதரை அவர்களுக்காக விட்டு விட்டு வந்துள்ளேன் என்று கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இப்போது எந்த

விஷயத்திலும் அவரை முந்திச் செல்ல முடியாது என்று நினைத்துக் கொண்டேன்.

(சுனன் அபூதாவூத், கிதாபுஸ் ஸகாத்.... ஹதீஸ் எண் 1678)

இந்த சம்பவத்தைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள். ஒரு ஜிஹாத் சம்பவத்தைக் குறித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எப்போதும் என்னை முந்திச் செல்வது எனக்கு நினைவுக்கு வந்தது. இன்று நான் அவரை முந்திச் செல்வேன் என்று நினைத்தவாறு நான் வீட்டிற்கு சென்றேன். எனது செல்வத்திலிருந்து பாதி செல்வத்தை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கொடுப்பதற்காக வந்தேன். அந்தக் காலம் இஸ்லாத்திற்கு மிகவும் கஷ்டமான காலமாக இருந்தது. ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களோ தமது எல்லா செல்வத்தையும் எடுத்துக் கொண்டு வந்தார்கள். அதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூபக்ரே! வீட்டில் எதை விட்டு விட்டு வந்துள்ளீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் என்று அன்னார் பதிலளித்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இதைக்கேட்டு நான் மிகவும் வெட்கி தலை குனிந்து விட்டேன். இன்று நான் முழு ஆற்றலையும் செலவழித்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை விட முந்த நினைத்தேன். ஆனால் இன்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னை முந்தி விட்டார்.

(ஃபஸாயிலுல் குர்ஆன் (3), அன்வாருல் உலூம் தொகுதி 11 பக்கம் 577)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு காலத்தில் மக்கள் இறை மார்க்கத்திற்காக தம் உயிர்களை செம்மறி ஆடுகளைப் போன்று தியாகம் செய்து வந்தனர். செல்வத்தைப் பொறுத்தவரை ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் ஒரு முறைக்கும் மேல் தம் வீட்டின் அனைத்து பொருட்களையும் தியாகம் செய்திருக்கின்றார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இது ஒரு முறை மட்டும் நிகழ்ந்த சம்பவமல்ல. மாறாக, ஒன்றுக்கும் மேற்பட்ட முறை நிகழ்ந்துள்ளது. எந்த அளவுக்கென்றால் ஊசியை கூட தம் வீட்டில் விட்டு வைக்கவில்லை. இவ்வாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது துணிவு மற்றும் விசாலாமான உள்ளத்திற்கேற்பவும், மேலும் உஸ்மான் (ரலி) தனது ஆற்றல் மற்றும் தகுதிக்கேற்பவும், தத்தமது எண்ணத்திற்கேற்பவும், தத்தமது தகுதி மற்றும் அந்தஸ்திற்கேற்பவும் கொண்டு வந்தார்கள்.

عَلٰى هٰذَا الْقِيَاسِ عَلٰى قَدْرِ مَرَاتِب

அனைத்து சஹாபிகளும் தமது உயிர்கள் மற்றும் செல்வங்களை இந்த இறை மார்க்கத்தில் தியாகம் செய்ய ஆயத்தமாகி விட்டனர்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜமாஅத்தை குறித்து அப்போது கூறினார்கள். சிலர் பைஅத் செய்து விடுகின்றனர். உலகை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவோம் என உறுதிமொழியும் கூறி விடுகின்றனர். ஆனால் உதவி ஒத்தாசையின்போது தமது பைகளை அழுத்தி பிடித்து வைத்துக் கொள்கின்றனர். உலகை இவ்வாறு நேசிப்பதால் ஏதாவது மார்க்க பயனை அடைய முடியுமா என்ன? இவ்வாறான மக்கள் நுபுவ்வத்திற்கு ஏதேனும் பயனளிக்க முடியுமா என்ன? அவ்வாறு ஒருபோதும் கிடையாது. அல்லாஹ் لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ என்று கூறியுள்ளான். நீங்கள் உங்களுக்கு விருப்பமான பொருட்களை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யாத வரை நீங்கள் நன்மையை பெற முடியாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 40 அடிக்குறிப்பு)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணித்தபோது அந்நேரத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எவ்வாறு எதிர் நடவடிக்கையை மேற்கொண்டார்கள்?

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரண நேரம் நெருங்கியது. வீட்டில் சில ஆண்கள் இருந்தனர். அவர்களில் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களும் ஒருவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நான் உங்களுக்கு ஒன்றை எழுத வைக்கின்றேன். அதன் பிறகு நீங்கள் வழிதவற மாட்டீர்கள் என்று கூறினார்கள். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நோயின் இறுதி நாட்களில் நடந்த சம்பவமாகும். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அங்கு சுற்றி அமர்ந்திருந் மக்களைப் பார்த்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடும் நோய்வாய்ப்பட்டுள்ளார்கள். உங்களிடத்தில் திருக்குர்ஆனும் உள்ளது. உங்களுக்கு அல்லாஹ்வின் வேதம் போதுமானது என்று கூறினார்கள். வீட்டிலிருந்த மக்கள் கருத்து வேறுபாடு கொண்டனர். வாதம் எதிர்வாதம் செய்தனர். விவாதம் ஆரம்பித்து விட்டது. அப்போது அவர்களுள் சிலர் தாளையும், எழுதுகோலையும் கொண்டு வாருங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களுக்கு எவ்வாறான விஷயத்தை எழுதுவார்கள் என்றால் அதன் பிறகு நீங்கள் வழி தவற மாட்டீர்கள் என்று கூறினர். மேலும் அவர்களுள் சிலர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு துன்பம் கொடுக்க வேண்டாம் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறிய விஷயத்தை கூறினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் இருந்து கொண்டு அவர்கள் அதிகம் விவாதித்தபோது அதாவது விவாதம் செய்ய ஆரம்பித்து கருத்து வேறுபாடு கொள்ள ஆரம்பித்தபோது, இங்கிருந்து சென்று விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் வஸிய்யத்... ஹதீ எண் 4234)

இது முஸ்லிமுடைய அறிவிப்பாகும். இதன் விளக்கம் புகாரியிலும் உள்ளது. அதில் உபைதுல்லாஹ் பின் அப்தில்லாஹ்விடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது அன்னாருடைய நோய் கடுமையாக பாதித்தபோது எழுதுவதற்காக ஏதேனும் பொருட்களை என்னிடம் கொண்டு வாருங்கள். நீங்கள் மறந்து போகாத விஷயத்தை நான் எழுதி விடுகின்றேன் என்று அன்னார் கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நோய் ஆதிக்கம் பெற்றுள்ளது என்று கூறினார்கள். அப்போது சுற்றியிருந்த மக்களைப் பார்த்து நம்மிடம் அல்லாஹ்வின் வேதம் உள்ளது. அதாவது திருக்குர்ஆன் அது நமக்கு போதுமானது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கஷ்டம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றார்கள். அப்போது மக்கள் தமக்கிடையில் கருத்து வேறுபாடு கொண்டனர். சப்தம் அதிகமாகி விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என் அருகிலிருந்து எழுந்து சென்று விடுங்கள். என் அருகில் சண்டையிட வேண்டாம் என்று கூறினார்கள். இதைக்கேட்ட ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் வெளியே சென்று விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எழுதுவதிலிருந்து தடுத்ததால் பெரும் நஷ்டம் ஏற்பட்டு விட்டது. அனைத்தும் நஷ்டமாகி விட்டது என்றார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் இல்ம், ஹதீஸ் எண். 114)

இதற்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் செய்யத் ஜைனுல் ஆபுதீன் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் அவர்கள் எழுதியதில் சிலவற்றை நான் எடுத்துரைக்கின்றேன். ஹதீஸுன் لَا تَضِلُّوْا بَعْدَهٗ இந்த சொற்கள் தெளிவாக்குவது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கடைசி தருணத்திலும் لَا تَضِلُّوْا بَعْدَهٗ அதாவது நீங்கள் மறந்து விடக்கூடாது. உங்களுக்கு எழுதுகின்றேன் என்ற கவலை இருந்தது.

لَا تَضِلُّوْا بَعْدَهٗ என்பதற்கு மறப்பது என்ற பொருளும் உண்டு. மறந்து வழிதவறிச் சென்று விடுதல் என்ற பொருளும் உண்டு.

غَلَبَهُ الْوَجَعُ நோய் அன்னாரை சோர்வடையச் செய்திருந்தது. துன்பம் அதிகரித்து விடக்கூடாது. இது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறிய விஷயத்தின் சொற்களாகும்.

ஷாஹ் சாஹிப் எழுதுகின்றார்: அன்னார் மரணமடைந்து விடுவார்கள் என்ற சிந்தனை கூட

## நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்பக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர்.

(முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai (Sec.Taleem, Melapalayam)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இருக்கவில்லை.

عِنْدَنَا كِتَابُ اللّٰهِ حَسْبُنَا

எங்களிடத்தில் இறை வேதம் உள்ளது. அது எங்களுக்கு போதுமானது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஏன் இதை கூறினார்கள் என்றால் அல்லாஹ் فَرَّطْنَا فِي الْكِتٰبِ مِنْ شَيْءٍ என்று சூரா அன்ஆமில் கூறியுள்ளான். (அதாவது இவ்வேதத்தில் எதனையும் விட்டு வைக்கவில்லை)

تِبْيَانًا لِّكُلِّ شَيْءٍ அதாவது இவ்வேதம் ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவாக விளக்குகிறது. நாம் இதில் எவ்வித குறையையும் வைக்கவில்லை.

அடுத்து அன்னார் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்று மென்மையான உணர்வுகளை கொண்ட நபர்கள் இவ்வாறான நேரத்தில் கஷ்டம் கொடுக்கக்கூடாது என்று கூறினர். சிலரோ கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிவிட்டார்கள் என்றால் எழுதுகோலையும், மையையும் கொண்டு வாருங்கள் என்றனர். அவர்களுக்கிடையில் விவாதம் ஆரம்பித்து விட்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களை சென்று விடுமாறு கட்டளையிட்டார்கள். என் அருகில் கூச்சலிடாதீர்கள் என்று கூறினார்கள். இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், அந்த நிம்மதியற்ற நிலையிலும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் அல்லாஹ்வின் வேதத்தின் மீது எந்த அளவுக்கு கண்ணியம் இருந்தது என்பதை தெரிந்து கொள்ளலாம். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பேச்சைக் கேட்ட பிறகு தாள், எழுதுகோல் மற்றும் மையை கொண்டு வரச் சொல்வதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எண்ணம் கொள்ளவில்லை.

புகாரியின் மற்ற அறிவிப்புகளிலிருந்து தெரிய வருவதுபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த சம்பவத்திற்கு பிறகும் கூட சில நாட்கள் உயிருடன் இருந்தார்கள். அந்நாளில் வேறு சில அறிவுரைகளையும் செய்திருந்தார்கள். ஆனால் அந்த எண்ணத்தை தொடரவில்லை. அதாவது அவ்விஷயத்தை மீண்டும் ஒரு முறை கூறவில்லை. எந்த கட்டளைகளை எழுது வைக்க வேண்டிய அவசியம் உள்ளது என்று நினைத்தார்களோ அவை இறைவேதத்தில் ஏற்கனவே இருப்பதாக புரிந்து கொள்ள முடிகிறது. அதாவது திருக்குர்ஆனுடன் பிணைந்திருக்குமாறு வலியுறுத்த விரும்பினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை ஆமோதித்து அமைதியாகி விட்டார்கள். இந்த நாகரீகம் பெயர் தாங்கி ஆலிம்களிடத்தில் இருப்பதில்லை.

ஷாஹ் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனுக்கு வழங்கிய கண்ணியமாகும். இந்த அக்கறை பெயர் தாங்கி ஆலிம்களுக்கு இருப்பதில்லை. ஓர் ஆலோசனையை அவர்கள் வெளிப்படுத்தி விட்டால் அதை இறை வஹியைப் போன்று கருத்தில் கொள்கிறார்கள்.

தொடர்ந்து எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த தூய முன்மாதிரியை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது. அல்லாஹ்வின் வேதத்திற்கு முன்னால் மற்ற எந்த விஷயங்களும் செல்லும்படி ஆகாது.

(ஸஹீஹுல் புகாரி, கிதாபுல் இல்ம், ஹதீஸ் எண். 114...................... மொழியாக்கம்: செய்யத் ஸைனுத்தீன் வலியுல்லாஹ் ஷாஹ், தொகுதி 1 பக்கம் 190 – ரப்வாவிலுள்ள நஸாரத் தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

உர்வா பின் ஸுபைர் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய துணைவியான ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சுனஹ்வில் இருந்தார்கள். சுனஹ் என்பது மதீனாவிலிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ள ஓர் இடத்தின் பெயராகும். புறநகர் பகுதியில் இருந்ததாக இஸ்மாயீல் கூறுகிறார். மரணச் செய்தியை கேட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் புறநகர் பகுதிக்கு சென்றிருந்தார்கள். ஆனால் மரணச் செய்தியை கேள்விப்பட்டு எழுந்து நின்று, அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மரணமடையவில்லை என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். இறைவன் மீது ஆணையாக! என் உள்ளத்தில் இந்த விஷயம் தான் தோன்றியது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: சில மக்களுடைய கை, கால்களை வெட்டி எறியும் பொருட்டு அல்லாஹ் அன்னாரை நிச்சயமாக எழுப்புவான். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்பதை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இல்லை. அன்னார் (ஸல்) மீண்டும் உயிர்பெற்று விடுவார்கள் என்று கூறி வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்திலிருந்து அவர்கள் துணியை விலக்கினார்கள். அன்னாரை முத்தமிட்டார்கள். என்னுடைய தாய், தந்தையர் உங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாழ்வின் போதும், மரணத்தின்போதும் பரிசுத்தமானவராகவும், தூய்மையானவராகவும் உள்ளார்கள். எனது உயிர் யாருடைய கையில் உள்ளதோ அவன் மீது ஆணையாக! அல்லாஹ் அன்னாருக்கு இரு மரணங்களை தர மாட்டான் என்று கூறியவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வெளியே வந்தார்கள். அதாவது மக்களிடம் சென்றார்கள். ஆணையிட்டுக் கூறுபவர்களே! கொஞ்சம் பொறுங்கள் என்று கூறினார்கள். அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை விளித்துக் கூறினார்கள்.

ஆணையிட்டு கூறுபவரே! கொஞ்சம் பொறுங்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பேச ஆரம்பித்ததும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அமர்ந்து விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இறைவனை துதித்து புகழ் பாடினார்கள்.

اَلَا مَنْ كَانَ يَعْبُدُ مُحَمَّدًا صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ
فَإِنَّ مُحَمَّدًا صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَدْ مَاتَ،
وَمَنْ كَانَ يَعْبُدُ اللّٰهَ فَإِنَّ اللّٰهَ حَيٌّ لَا يَمُوْتُ

கேளுங்கள்! எவர் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களை வணங்கி வந்தாரோ அவர் புரிந்து கொள்ளட்டும். முஹம்மத் (ஸல்) அவர்களோ நிச்சயமாக இறந்து விட்டார்கள். எவர் அல்லாஹ்வை வணங்கி வந்தாரோ அவர் நினைவிற் கொள்ளட்டும். அல்லாஹ் உயிருடன் உள்ளான். (அவன்) ஒருபோதும் மரணிப்பவன் அல்லன் என்று கூறினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்,

اِنَّكَ مَيِّتٌ وَّاِنَّهُمْ مَّيِّتُوْنَ என்ற வசனத்தை ஓதினார்கள். அதாவது நீயும் மரணமடைவீர். அவர்களும் மரணமடைவார்கள். அதன் பிறகு,

وَمَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ قَدْ خَلَتْ
مِنْ قَبْلِهِ الرُّسُلُ اَفَائِنْ مَّاتَ اَوْ قُتِلَ
انْقَلَبْتُمْ عَلٰى اَعْقَابِكُمْ وَمَنْ يَّنْقَلِبْ عَلٰى عَقِبَيْهِ
فَلَنْ يَّضُرَّ اللّٰهَ شَيْـًٔا وَسَيَجْزِي اللّٰهُ الشّٰكِرِيْنَ

என்ற வசனத்தை ஓதினார்கள். அதாவது முஹம்மத் (ஸல்) ஒரு தூதர் மட்டுமே ஆவார். அவருக்கு முன் தோன்றிய எல்லா தூதர்களும் மரணமடைந்து விட்டனர். எனவே அவன் மரணமடைந்து விட்டாலோ அல்லது கொலை செய்யப்பட்டாலோ நீங்கள் உங்கள் குதிகால்களில் திரும்பிச் சென்று விடுவீர்களா? தமது குதிகால்களில் திரும்பிச் சென்று விடுபவரால் ஒருபோதும் அல்லாஹ்விற்கு சிறு இழப்பையும் ஏற்படுத்த முடியாது. நன்றி செலுத்துபவருக்கு அல்லாஹ் நிச்சயம் நற்பலன் வழங்குவான். சுலைமான் கூறுகிறார்கள்: இதைக்கேட்டு மக்கள் தேம்பித் தேம்பி அழுதார்கள்.

(ஸஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயில்....... ஹதீஸ் எண் 3667, 3668)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்நேரத்தில் அந்த வசனத்தை ஓதும் வரை அந்த வசனத்தையும் இறைவன் இறக்கியதாக மக்களுக்கு தெரியவில்லை. சுருக்கமாக எல்லா மக்களும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடமிருந்து அந்த வசனத்தை கற்றுக் கொண்டனர். பிறகு மக்களில் நான் யாரைக் கண்டாலும் அந்த வசனத்தை ஓதுபவராகவே கண்டேன். ஸுஹ்ரி இவ்வாறு கூறி வந்தார்கள்: சயீத் பின் முஸய்யம் என்னிடம் கூறினார்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த வசனத்தை ஓதக் கேட்டதும் எந்த அளவுக்கு நான் அதிர்ச்சிக்கு ஆளானேன் என்றால் எனது கால்கள் என்னை தாங்கிப் பிடிக்க முடியவில்லை. நான் நிலத்தில் விழுந்து விட்டேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வசனத்தை ஓதக் கேட்டதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்பதை நான் அறிந்து கொண்டேன் என்று கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி...

ஹதீஸ் எண் 4454)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஹதீஸின் அரபிச் சொற்களையும் அன்னார் எடுத்துக் கூறி வந்தார்கள். இங்கு நான் அதனுடைய மொழியாக்கத்தை மட்டும் கூறி விடுகின்றேன். அச்சாகி வெளி வரும்போது அச்சொற்களுடன் வெளியாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

عَنْ عَبْدِ اللهِ بْنِ عَبَّاسٍ اَنَّ اَبَا بَكْرٍ خَرَجَ وَ عُمَرُ
يُكَلِّمُ النَّاسَ فَقَالَ اِجْلِسْ يَا عُمَرُ فَاَبٰى
عُمَرُ اَنْ يَجْلِسَ فَاَقْبَلَ النَّاسُ اِلَيْهِ وَتَرَكُوا عُمَرَ
فَقَالَ اَبُو بَكْرٍ اَمَّا بَعْدُ مَنْ مِنْكُمْ يَعْبُدُ
مُحَمَّدًا فَاِنَّ مُحَمَّدًا قَدْ مَاتَ وَمَنْ كَانَ مِنْكُمْ يَعْبُدُ اللهَ
فَاِنَّ اللهَ حَيٌّ لَا يَمُوْتُ۔ قَالَ اللهُ وَمَا
مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ۔
اِلَى الشَّاكِرِيْنَ۔ وَقَالَ وَاللهِ كَاَنَّ النَّاسَ لَمْ
يَعْلَمُوْا اَنَّ اللهَ اَنْزَلَ هٰذِهِ الْاٰيَةَ حَتّٰى تَلَاهَا اَبُوْ بَكْرٍ
فَتَلَقَّاهَا مِنْهُ النَّاسُ كُلُّهُمْ فَمَا اَسْمَعُ
بَشَرًا مِنَ النَّاسِ اِلَّا يَتْلُوهَا اَنَّ عُمَرًا قَالَ وَاللهِ
مَا هُوَ اِلَّا اَنْ سَمِعْتُ اَبَا بَكْرٍ تَلَاهَا فَعَقِرْتُ
حَتّٰى مَا يُقِلُّنِي رِجْلَایَ وَحَتّٰى اَهْوَيْتُ اِلَى الْاَرْضِ
حَتّٰى سَمِعْتُهُ تَلَاهَا اَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ
وَسَلَّمَ قَدْ مَاتَ

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆன நாளில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வெளியே வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களிடையே ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணிக்கவில்லை. உயிருடன் உள்ளார்கள் என்று பேசிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், உமரே! அமர்ந்து விடுங்கள் என்று கூறினார்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அமர மறுத்து விட்டார்கள். ஆகவே மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை நோக்கி கவனம் செலுத்தினர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை விட்டு விட்டனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இறைவனை புகழ்ந்து ஸலவாத் ஓதிய பிறகு, எவர் உங்களில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை வணங்குகிறாரோ அவர் புரிந்து கொள்ளட்டும். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் இறந்து விட்டார்கள். மேலும் எவர் உங்களில் இறைவனை வணங்குகிறாரோ அவர், இறைவன் உயிருடன் உள்ளான் என்றும், மரணிப்பவன் அல்லன் என்பதையும் புரிந்து கொள்ளட்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறந்ததற்கான சான்று என்னவென்றால், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஒரு தூதர் மட்டுமே ஆவார்கள். அவருக்கு முன்பு தோன்றிய அனைத்து தூதர்களும் இவ்வுலகை விட்டுச் சென்று விட்டனர். அதாவது மரணித்து விட்டனர் என்பதாகும்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் اَلشَّاكِرِيْنَ வரை இந்த வசனத்தை ஓதிக் காட்டினார்கள்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: அறிவிப்பாளர் கூறுகிறார்: இறைவன் மீது ஆணையாக! இவ்வசனத்தையும் இறைவன் இறக்கியதாக மக்கள் அறியாமல் இருந்தனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஓதியதைக் கேட்டு மக்களுக்கு தெரிந்தது. இந்த வசனத்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடமிருந்து அனைத்து சஹாபிகளும் கற்றுக் கொண்டனர். எந்தவொரு சஹாபியும் எந்தவொரு நபரும் இந்த வசனத்தை ஓதாமல் இருக்கவில்லை.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இறைவன் மீது ஆணையாக! நான் இந்த வசனத்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடமிருந்தே கேட்டேன். அன்னார் இவ்வசனத்தை ஓதக்கேட்ட போது நான் நினைவிழந்து காயமுற்றுப் போனேன். எனது கால்களால் என்னை தாங்க முடியவில்லை. இதனை ஓதக்கேட்ட நேரம் முதல் நான் நிலத்தில் விழுந்து கொண்டே சென்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்று கூறக்கேட்ட நேரம் முதல் நான் நிலத்தில் விழுந்து கொண்டே சென்றேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: புகாரி விளக்கவுரையான கஸ்தலானியில் இந்த ஒரு வாக்கியம் உள்ளது. அது என்னவென்றால்,

وَعُمَرُ بْنُ الْخَطَّابِ يُكَلِّمُ النَّاسَ يَقُوْلُ لَهُمْ
مَا مَاتَ رَسُوْلُ اللهِ وَلَا يَمُوْتُ حَتّٰى
يَقْتُلَ الْمُنَافِقِيْنَ

அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணிக்கவில்லை. நயவஞ்சகர்களை கொல்லாத வரை மரணிக்க மாட்டார்கள் என்று மக்களிடம் பேசி வந்தார்கள்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த சம்பவம் குறித்து ஒரு மேற்கோள் உள்ளது.

قَالَ عُمَرُ بْنُ الْخَطَّابِ مَنْ قَالَ اَنَّ مُحَمَّدًا
مَاتَ فَقَتَلْتُهُ بِسَيْفِيْ هٰذَا ۔ وَاِنَّمَا رُفِعَ اِلَى السَّمَآءِ
كَمَا رُفِعَ عِيْسَى ابْنُ مَرْيَمَ عَلَيْهِ السَّلَامُ
وَقَالَ اَبُوْبَكْرٍ بْنُ قُحَافَةَ مَنْ كَانَ يَعْبُدُ مُحَمَّدًا فَاِنَّ
مُحَمَّدًا قَدْ مَاتَ وَمَنْ كَانَ يَعْبُدُ اِلٰهَ مُحَمَّدٍ
فَاِنَّهُ حَيٌّ لَا يَمُوْتُ وَقَرَءَ هٰذِهِ الْاٰيَةَ وَمَا مُحَمَّدٌ
اِلَّا رَسُوْلٌ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ اَفَائِنْ
مَّاتَ اَوْ قُتِلَ انْقَلَبْتُمْ عَلٰى اَعْقَابِكُمْ

அதன் மொழியாக்கம் என்னவென்றால், ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறந்து விட்டதாக எவராவது கூறினால் நான் அவரை இவ்வாளைக் கொண்டே கொன்று விடுவேன். மர்யமின் மகன் ஈஸா உயர்த்தப்பட்டதைப் போன்று அன்னார் வானத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எவர் முஹம்மது (ஸல்) அவர்களை வணங்கி வந்தாரோ (அவர் புரிந்து கொள்ளட்டும்) அன்னார் நிச்சயமாக இறந்து விட்டார்கள். எவர் முஹம்மது (ஸல்) அவர்களின் இறைவனை வணங்கி வந்தாரோ அந்த இறைவன் உயிருடன் இருக்கின்றான். அவன் மரணிப்பவன் அல்லன் (என்று புரிந்து கொள்ளட்டும்). அதாவது எப்போதும் உயிருடன் இருக்கும் பண்பு இறைப்பண்பே ஆகும். அழியா நிலையை குறித்த சிந்தனை தோன்றும் முன்பே மனிதர்களும் விலங்குகளும் மரணித்து விடுவர். எப்போதும் இருக்கக்கூடிய சிந்தனையாக இருந்தாலும் அது தோன்றுவதற்கு முன்பே இறந்து விடுவர்.

பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த வசனத்தை ஓதினார்கள். அதன் மொழியாக்கம் என்னவென்றால், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஒரு தூதர் ஆவார். எல்லா தூதர்களும் உலகை விட்டுச் சென்று விட்டனர். ஆகவே அவர் இறந்து போனாலோ அல்லது கொல்லப்பட்டு விட்டாலோ நீங்கள் முர்தத் ஆகி விடுவீர்களா? அப்போது மக்கள் அந்த வசனத்தை கேட்டு தமது எண்ணங்களை விட்டு திரும்பினர். எல்லா நபிமார்களும் இறந்து விட்டனர். என்ற இந்த சான்றை திருக்குர்ஆனிலிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எடுத்து வைக்கவில்லையென்றால் அத்துடன் சான்று தெளிவானதும், உறுதியானதுமாக இல்லாதிருந்தால் உங்கள் கூற்றுப்படி சஹாபிகள் ஒரு லட்சத்தை விடவும் அதிகமாக இருந்தார்கள். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சான்று கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த நபருடைய கூற்றின்படி சஹாபிகள் ஒரு லட்சத்தையும் விட அதிகமாக இருந்தனர்.

அன்னார் கூறுகிறார்கள்: அந்த சஹாபிகள் வெறும் யூகத்தையும், சந்தேகத்திற்குரிய விஷயத்தையும் எவ்வாறு ஒப்புக் கொண்டனர். உங்களுடைய இந்த சான்று முழுமையற்றது. வெளிப்படையான, உறுதியான சான்று உங்களிடம் இல்லை. رَافِعُكَ اِلَيَّ என்ற வசனம் திருக்குர்ஆனின் வசனம் தான் என்று இதுவரை உங்களுக்கு தெரியாதா என்ன? அதில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் பூத உடலுடன் வானத்திற்கு சென்றது கூறப்பட்டுள்ளதே!

بَلْ رَفَعَهُ اللهُ اِلَيْهِ என்ற வசனத்தை நீங்கள் கேட்டதில்லையா? பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வானத்திற்கு சென்றிருப்பது ஏன் சாத்தியமற்றது? என்று சஹாபிகள் ஏன் வாதம் செய்யவில்லை. சஹாபிகளுக்கு திருக்குர்ஆனைக் குறித்து எந்த அளவுக்கு ஆழிய ஞானம் இருந்ததென்றால் வசனத்தை கேட்டவுடன் அதிலுள்ள خَلَتْ சென்று விட்டார்கள் என்ற விளக்கத்தையும், மேலும் اَفَاِنْ مَّاتَ اَوْ قُتِلَ அதாவது இறந்து போனாலோ அல்லது கொல்லப்பட்டாலோ என்ற சொற்றொடரை கண்ட பிறகு உடனடியாக தங்களது முந்தைய

சிந்தனைகளை விட்டு விட்டார்கள். ஆயினும் அவர்களது உள்ளங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின் காரணமாக கடும் துக்கத்தில் இருந்தன. அவை சிதறுண்டு போய் விட்டன. அவர்களது உயிரே போய் விட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இந்த வசனத்தை கேட்ட பிறகு எனது நிலை எவ்வாறு இருந்ததென்றால், எனது உடலை எனது கால்களால் தாங்க இயலவில்லை. நான் பூமியில் விழுந்து கொண்டே இருந்தேன். சுப்ஹானல்லாஹ்! எந்த அளவு நற்பேறு பெற்ற திருக்குர்ஆனில் அர்ப்பணமாகியிருந்த மக்கள் ஆவார்கள்! வசனத்தை சிந்தித்து கடந்த கால அவர்கள் அனைத்து நபிமார்களும் இறந்து விட்டார்கள் என்பதை புரிந்து கொண்ட பிறகு அழ ஆரம்பித்து விட்டனர். துக்கத்தால் நிரம்பி விட்டனர். இதைத்த தவிர வேறு ஒன்றும் அவர்கள்கூறவில்லை.

(தஹ்ஃபா கஸ்னவிய்யா ரூஹானி கஸாயின் தொகுதி 15 பக்கம் 579–583)

பிறகு இன்னொரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களைக் குறித்து அன்னார் இறந்து விட்டார்கள் என்று எவர் கூறுவாரோ அவரை நான் எனது வாளினால் கொன்று விடுவேன் என ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு தமது ஏதேனும் ஒரு எண்ணத்தின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வின் மீது எதிர்பார்ப்பு இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறந்து விட்டதாக கூறப்பட்ட வாக்கியத்தை நிராகரிப்பின் வாக்கியமாகவும், கொள்கை மறுப்பின் வாக்கியமாகவும் அவர்கள் கருதினார்கள். இறைவன் ஆயிரக்கணக்கான நற்பலனை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு வழங்குவானாக. அவர்கள் வெகு விரைவில் இந்த குழப்பத்தை வீழ்த்தினார்கள். அவர்கள் தெளிவான ஆதாரங்களை எடுத்து வைத்து கடந்த கால நபிமார்கள் அனைவரும் இறந்து விட்டனர் என்று கூறினார்கள். உண்மையில் இந்த விளக்கத்தின் மூலமாகவும் பல்வேறு கோணலான பொய்யர்களை அனைத்து சஹாபிகளின் ஒன்றுபட்ட கருத்தின் மூலமாக கொல்லவில்லையா என்ன? ஆமாம் அவர்கள் இறந்து விட்டார்கள். முஸைலமா கஸ்ஸாப் மற்றும் அஸ்வத் அன்ஸி போன்றோரை கொலை செய்ததுபோன்று உண்மையில் இந்த விளக்கத்தின் மூலமாக பல கோணலான பொய்யர்களை சஹாபிகள் இந்த ஒன்றுபட்ட கருத்தால் கொன்றார்கள். அந்தப் பொய்யனை கொலை செய்ததைப்போன்று அந்த கண்ணோட்டத்தையும் முடிவுக்கு கொண்டு வந்தார்கள். இதன் அடிப்படையில் நான்கு பொய்யர்கள் கொல்லப்படவில்லை. மாறாக ஐந்து பொய்யர்கள் கொல்லப்பட்டார்கள்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவா! அன்னாரின் உயிரின் மீது கோடிக்கணக்கான அருட்களை பொழிவாயாக. இந்த இடத்தில் خَلَتْ என்ற சொல்லிற்கு சில நபிமார்கள் வானத்திற்கு உயிருடன் சென்றுள்ளார்கள் என்ற பொருள் கொடுக்கப்பட்டாலும் கூட அப்போது அந்நிலையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உண்மையின் பக்கம் இருந்திருப்பார்கள். இந்த வசனம் அவரை எதிர்க்காமல் அவருக்கு ஆதரவு தந்திருக்கும். ஆனால் இந்த வசனத்தின் அடுத்த பகுதி இதன் விளக்கவுரையாக உள்ளது. அதாவது اَفَاۡئِنْ مَّاتَ اَوْ قُتِلَ அதன் மீது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பார்வை சென்றது. அனைத்து நபிமார்களும் சென்று விட்டார்கள். அவர்கள் மரணித்து சென்றாலும் சரியே; உயிருடன் சென்றாலும் சரியே என்ற இந்த வசனத்திற்கு பொருள் கொண்டால் இது பெய்யும், பித்தலாட்டமும், இறை விருப்பத்திற்கு எதிராக ஒரு மிகப்பெரும் பழியும் ஆகும். வேண்டுமென்றே இவ்வாறான பழிச்சொல்லை கூறுபவர் நியாயத் தீர்ப்பு நாளைக் கண்டு அஞ்சாதவர் ஆவார். அவர்கள் இறைவனின் விளக்கத்திற்கு மாறாக நேர்மற்றமான பொருளை கூறுபவர்கள் ஆவர். அவர்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரந்தரமான நரகங்களின் கீழே இருப்பர். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அந்நேரம் வரை அந்த வசனத்தை குறித்து தெரியாமல் இருந்தது. இன்னும் சில சஹாபிகளும் இந்த தவறான எண்ணத்தில் மூழ்கி இருந்தார்கள். அவர்கள் மறதியில் சிக்கி இருந்தார்கள். அது மனித இயல்பில் இருந்தது. சில நபிமார்கள் இப்போது வரை உயிருடன் உள்ளனர். பிறகு அவர்கள் உலகிற்கு வருவார்கள். அவர்களைப் போன்றே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஏன் இருந்திருக்கக்கூடாது? என்று அவர்களின் உள்ளங்களில் எண்ணி இருந்தனர். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அனைத்து வசனங்களையும் ஓதி اَفَاۡئِنْ مَّاتَ اَوْ قُتِلَ என்று படித்துக் காட்டி خَلَتْ சென்று விட்டார்கள் என்பதற்கு இரு வகை பொருள் மட்டுமே கொள்ளப்படும் என்று அவர்களின் உள்ளங்களில் இவ்விஷயத்தை அமர வைத்தார்கள்.

اَفَاۡئِنْ مَّاتَ اَوْ قُتِلَ என்பதன் பொருள் இயல்பான மரணத்தினால் இறப்பது அல்லது கொல்லப்படுவது. அப்போது எதிர்த்தவர்கள் தமது தவறை ஒப்புக் கொண்டனர். கடந்த கால நபிமார்கள் அனைவரும் இறந்து விட்டனர் என்று அனைத்து சஹாபிகளும் இந்தக் கொள்கையில் ஒருமித்தனர். اَفَاۡئِنْ مَّاتَ اَوْ قُتِلَ என்ற சொற்றொடர் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அனைவரும் தமது எதிர்ப்பு சிந்தனையை விட்டு திரும்பி விட்டனர். فَالْحَمْدُ لِلّٰهِ عَلٰى ذٰلِكَ

(தஹ்ஃபா கஸ்னவிய்யா ரூஹானீ கஸாயின் தொகுதி 15 பக்கம் 581, 582)

இதை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தஹ்ஃபா கஸ்னவிய்யா என்ற நூலில் கூறியிருக்கின்றார்கள்.

பிறகு இன்னோர் இடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின்போது தான் அனைத்து நபிமார்களும் இறந்து விட்டதாக அனைத்து சஹாபிகளும் சாட்சியம் அளித்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இப்போது மரணிக்கவில்லை என்று கூறி வாளை உருவி நின்றார்கள். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் எழுந்து நின்று இந்த குத்பாவை கொடுத்தார்கள்.

مَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ

எந்த அளவுக்கு என்றால் உஸாமாவின் படை கூட கிளம்பவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறியதற்கிணங்க இந்த சந்தர்ப்பம் ஒரு கியாமத்தின் மைதானமாகவே இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வுலகை விட்டு பிரிந்து சென்று விட்டார்கள் என்பதில் அனைத்து சஹாபிகளும் ஒன்றுபட்டிருந்தனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உரத்த குரலில், ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்று கூறினார்கள்.

مَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ

என்பதை சான்றாக காட்டினார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் இருப்பதாக சஹாபிகளின் சிந்தனையிலும் எண்ணத்திலும் ஏதாவது இருந்திருந்தாலும் கூட நிச்சயமாக அவர்கள் கூறியிருப்பார்கள். ஆனால் அனைவரும் அமைதியாகி விட்டார்கள். இன்று இறங்கியது போன்று இந்த வசனத்தை கடை வீதிகளில் ஓதிக் கொண்டிருந்தார்கள். சஹாபிகள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஆளுமையின் கீழ் வந்து மௌனமாக இருந்து கொண்டு அதனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை எதிர்க்காமல் இருக்கும் அளவுக்கு சஹாபிகள் நயவஞ்சகர்களாக இருக்கவில்லை. அல்லாஹ் காப்பாற்றுவனாக. அவ்வாறன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எடுத்துக்கூறிய விஷயம் தான் உண்மையான விஷயமாகும். ஆகவே அனைவரும் தலை குனிந்து விட்டனர். இது சஹாபிகளின் ஒருமித்த கருத்தாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்ப வருவார்கள் என்று தான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் கூறினார்கள். இந்த சான்று முழுமையானதல்ல. இது எப்போது முழுமையானதாக இருந்திருக்கும் என்றால் எந்தவொரு வகையிலும் இது விலக்கு பெற்றிருக்கக்கூடாது. ஏனென்றால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் வானத்திற்கு சென்றிருப்பார்கள் என்றால் அவர் திரும்ப வரவும் வேண்டும். அப்போது இது சான்றாக இருந்திருக்காது. இது நகைப்பிற்குரியதாக ஆகி இருக்கும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களே இதை

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

மறுத்திருப்பார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 440,441)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல்வேறு இடங்களில் மீண்டும் மீண்டும் இச்சம்பவத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள். நான் பல்வேறு சம்பவங்களை ஏன் எடுத்துரைத்தேன் என்றால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் வானத்தில் இருப்பதாக எவர்கள் நினைக்கிறார்களோ அவர்களின் சிந்தனையிலாவது எந்தவொரு மனிதனும் உயிருடன் வானத்திற்கு செல்லவில்லை. செல்லவும் முடியாது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களும் மரணித்து விட்டார்கள் என்ற எண்ணம் பிறக்க வேண்டும் என்பதற்காகவே ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஒரு முறை அன்னாருடன் நான் சென்று கொண்டிருந்தேன். தனது ஏதோவொரு பணியின் காரணமாக அன்னார் சென்றிருப்பார்கள். அன்னாருடைய கையில் சவுக்கு இருந்தது. என்னைத் தவிர வேறு யாரும் அன்னாருடன் இருக்கவில்லை. அவர்கள் தம்மிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். தம்முடைய கால்களின் பின் பகுதியில் சவுக்கை கொண்டு அடித்துக் கொண்டே வந்தார்கள். திடீரென்று என் பக்கம் திரும்பி, இப்னு அப்பாஸே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்த நாளில் அன்னார் மரணிக்கவில்லை என்று எவர் இவ்வாறு கூறுவாரோ அவரை நான் வாளால் கொன்று விடுவேன் என்று ஏன் கூறினேன் என்று தெரியுமா? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: அமீருல் மூமினீன் அவர்களே! எனக்குத் தெரியாது. தாங்களே அறிவீர்கள் என்றேன். அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஏன் கூறினீர்கள் என்று தாங்களே அறிவீர்கள் என்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அதற்கான காரணம் என்னவென்றால்,

وَكَذٰلِكَ جَعَلْنٰكُمْ اُمَّةً وَّسَطًا لِّتَكُوْنُوْا
شُهَدَآءَ عَلَى النَّاسِ وَيَكُوْنَ الرَّسُوْلُ عَلَيْكُمْ شَهِيْدًا

என்ற வசனத்தை நான் ஓதி வந்தேன். அதாவது நீங்கள் மக்களுக்கு மேற்பார்வையாளராக விளங்குவதற்காகவும், இத்தூதர் உங்களுக்கு மேற்பார்வையாளராக விளங்குவதற்காகவும் நான் உங்களை மிகவும் உயரிய ஒரு சமுதாயமாக ஆக்கியுள்ளோம். அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சமுதாயத்தில் உயிருடன் இருந்து கொண்டு அவர்களின் செயலுக்கு சாட்சியாளராக இருப்பார்கள் என்று நான் புரிந்து வைத்திருந்தேன். ஆகவே இதன் காரணமாகத்தான் அந்நாளில் நான் அவ்வாறு பேசினேன் என்றார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 901 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் குறித்து புகாரியில் குறிப்பு காணப்படுகிறது. அது முன்னரும் கூறப்பட்டுள்ளது. இப்போது நான் எடுத்தரைக்கின்றேன். பனி ஸாயிதாவின் வீட்டில் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களுக்கு அருகில் அன்ஸார் ஒன்று கூடினார்கள். எங்களிடமிருந்து ஒரு அமீரும், உங்களிடமிருந்து ஒரு அமீரும் இருக்க வேண்டும் என்று கூறினர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி), ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) ஆகியோர் அவர்களிடத்தில் சென்றனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பேச ஆரம்பித்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரை மௌனமாக நிற்கச் சொன்னார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு மிகவும் விருப்பமான ஒரு சொற்பொழிவை நான் ஆயத்தப்படுத்தி வைத்திருந்தேன். அதை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சென்றடைய முடியாது என்று கருதிக் கொண்டிருந்தேன். அதாவது அவ்வாறு பேச முடியாது என்று நினைத்துக் கொண்டு நான் பேச விரும்பினேன். அதற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். எவ்வாறான சொற்பொழிவாற்றினார்கள் என்றால் சொற்பொழிவு திறனில் அனைத்து மக்களுடைய சொற்பொழிவையும் விட மேலானதாக இருந்தது. அவர்கள் தம் சொற்பொழிவுக்கிடையில் நாங்கள் அமீர்கள் ஆவோம். நீங்கள் அமைச்சர்கள் ஆவீர்கள். அன்ஸாரிகளைப் பார்த்து நீங்கள் அமைச்சர்கள் ஆவீர்கள் என்று கூறினார்கள்.

ஹப்பாப் பின் முஸ்லிர் அவர்கள் இதைக்கேட்டு அவ்வாறு ஒருபோதும் கிடையாது. அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவ்வாறு ஒருபோதும் கிடையாது. நாங்கள் அவ்வாறு நடந்து கொள்ள மாட்டோம். எங்களிடமிருந்து ஒரு அமீர் இருப்பார்; உங்களிலிருந்து ஒரு அமீர் இருப்பார் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவ்வாறு கிடையாது என்றார்கள். நாங்கள் அமீராக இருப்போம். நீங்கள் அமைச்சராக இருப்பீர்கள். ஏனென்றால் குரைஷியர்கள் வம்சத்தின் அடிப்படையில் அனைத்து அரபுகளையும் விட மேலானவர்கள் ஆவார்கள். பாரம்பரியத்தின் அடிப்படையில் அவர்கள் பழங்காலத்து அரபிகள் ஆவர். ஆகவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அல்லது அபூ உபைதா அவர்களிடம் பைஅத் செய்யுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவ்வாறன்று என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பார்த்து நாங்கள் உங்களிடம் பைஅத் செய்வோம். ஏனென்றால் நீங்கள் எங்களுடைய தலைவர் ஆவீர்கள். எங்களில் சிறந்தவர் ஆவீர்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எங்கள் அனைவரையும் விட நீங்களே அதிக விருப்பத்திற்குரியவர் ஆவீர்கள் என்று கூறியவாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கையைப் பிடித்து பைஅத் செய்தார்கள். மக்களும் அன்னாரிடம் பைஅத் செய்தனர்

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்)......... ஹதீஸ் எண் 3668)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கையை பிடித்து எங்களிடம் பைஅத் வாங்குங்கள் என்று கூறியவாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்கள். அத்துடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், அபூபக்ரே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களை தொழ வைக்குமாறு கட்டளையிட்டுள்ளார்கள். ஆகவே தாங்கள் தான் அல்லாஹ்வின் கலீஃபா ஆவீர்கள். நாங்கள் ஏன் தங்களிடம் பைஅத் செய்துள்ளோம் என்றால் எங்களை விட தாங்கள் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அதிக விருப்பத்திற்குரியவர் ஆவீர்கள் என்று கூறினார்கள்.

முர்தர் ஆனவர்களின் குழப்பத்தைக் குறித்து சீரத் இப்னு ஹிஷாமில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வஃபாத்தானபோது முஸ்லிம்களின் துன்பங்கள் அதிகரித்து விட்டன. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்து எனக்கு ஓர் அறிவிப்பு கிடைத்துள்ளது. அன்னார் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணித்தபோது அரபிகள் முர்ததாகி விட்டனர். யூதர்களும் கிருஸ்துவர்களும் எழுந்து நின்றனர். நயவஞ்சகம் வெளிப்பட்டு விட்டது. இதை இப்னு இஸ்ஹாக் அவர்கள் கூறுகிறார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 903 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுவதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது அன்னாருக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபா ஆனார்கள். அரபிகளில் எவர் நிராகரிக்க வேண்டியதிருந்ததோ அவர் நிராகரித்தார். அப்போது ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் நீங்கள் மக்களுடன் எவ்வாறு போரிடுவீர்கள்? ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்று மக்கள் ஒப்புக் கொள்ளும் வரை நான் அவர்களுடன் போரிட வேண்டும் என தமக்கு கட்டளையிடப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்கள் என்றார்கள். அதாவது எவர் لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்று ஒப்புக் கொள்வாரோ அவருடன் போரிட முடியாது. எவர் لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்று ஒப்புக் கொள்வாரோ அவர் என்னிடமிருந்து

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

தமது செல்வத்தையும், உயிரையும் காப்பாற்றிக் கொள்வார். உரிமை விஷயத்தில் எவருடைய கணக்கு அல்லாஹ்வின் பொறுப்பில் உள்ளதோ அவரைத்தவிர என்று கூறப்பட்டுள்ளதே என்றேன். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! எவர் தொழுகை மற்றும் ஸகாத்திற்கிடையே வேறுபாடு காட்டுவாரோ அவருடன் நான் சண்டையிடுவேன். ஏனென்றால் ஸகாத் என்பது செல்வத்திற்கான உரிமையாகும். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கொடுத்து வந்த கால்நடைகளை கட்டிப்போடக்கூடிய கயிறை தர மறுத்தாலும் கூட அதன் காரணமாக நான் அவர்களுடன் போரிடுவேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பிறகு அல்லாஹ் போருக்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உள்ளத்தை விசாலமாக்கியதை நான் கண்டேன். இது உண்மை தான் என்று நான் தெரிந்து கொண்டேன்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் இஃதிஸாம் பில் கிதாப் வ சுன்னா..... ஹதீஸ் எண் 7284, 7285)

ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்களின் படை புறப்படும்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களுக்கு சில வழிகாட்டல்களை வழங்கினார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் வாகனத்தில் அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவருடன் நடந்து கொண்டே சென்றார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் தாங்கள் வாகனத்தில் அமருங்கள். அல்லது நான் இறங்கி விடுகின்றேன் என்று கோரிக்கை வைத்தார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நீங்கள் இறங்க வேண்டாம். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் வாகனத்தில் அமரவும் மாட்டேன் என்று கூறினார்கள். மேலும் கொஞ்சம் நேரம் நான் எனது கால்களை அல்லாஹ்வின் வழியில் தூசி பட வைக்க வேண்டாமா? என்று கேட்டவாறு போர் வீரன் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் பிரதிபலனாக 700 நன்மைகள் எழுதப்படும். அத்துடன் 700 அந்தஸ்துகள் உயர்த்தப்படும். மேலும் அவருடைய 700 தவறுகள் மன்னிக்கப்படும் என்று கூறினார்கள். வழிகாட்டல் வழங்கிய பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களிடம் நீங்கள் பொருத்தமானதாக கருதினால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைக் கொண்டு எனக்கு உதவி செய்யுங்கள் என்று கூறினார்கள். அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை தம்மிடத்தில் நிறுத்தி வைத்துக் கொள்ள ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களிடம் அனுமதி வேண்டினார்கள். ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தப் படையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களையும் இணைத்திருந்தார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் அதற்கு அனுமதி வழங்கினார்கள்.

(தாரீக் திப்ரி தொகுதி 2 பக்கம் 246.... – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

யமாமாவின் மக்கள் ஷஹீதாக்கப்பட்டபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னை அழைத்தார்கள். அப்போது அன்னாருடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்னிடம் வந்துள்ளார். யமாமா போரில் மக்கள் அதிகமாக ஷஹீதாகி விட்டார்கள். வேறு போர்களில் திருக்குர்ஆனை ஓதுபவர்கள் கொலை செய்யப்பட்டு விடக்கூடாது. இவ்வாறு திருக்குர்ஆனின் பெரும் பகுதி வீணாகி விடும் என அவர் அஞ்சுகிறார். ஆகவே திருக்குர்ஆனை ஒன்று திரட்டுங்கள். திருக்குர்ஆனை ஓரிடத்தில் ஒன்று சேருங்கள் என்று என்னிடம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார் என்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்யாத ஒரு விஷயத்தை நான் எவ்வாறு செய்வது? என்று கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்னிடம், அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்களுடைய இந்தப் பணி நல்ல பணியாகும் என்று கூறுகிறார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்னிடம் மீண்டும், மீண்டும் இதையே கூறிக் கொண்டிருந்தார். எந்த அளவுக்கென்றால் அதற்காக அல்லாஹ் எனது உள்ளத்தையும் திறந்து விட்டான். ஆகவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பொருத்தமானதாக கருதுவதை இப்போது நான் பொருத்தமானதாக கருதுகிறேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஸைது பின் சாபித் கூறினார்கள்: அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாருடன் அமர்ந்திருந்தார். மௌனமாக உட்கார்ந்திருந்தார். எதுவும் பேசவில்லை. பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னிடம் நீங்கள் இளைஞரும், புத்திசாலியும் ஆவீர். உம்மீது நான் தப்பெண்ணம் கொள்ளவில்லை. நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வஹீ எழுதி வந்துள்ளீர்கள். ஆகவே எங்கிருந்தெல்லாம் திருக்குர்ஆன் கிடைக்குமோ அங்கிருந்தெல்லாம் அதை ஓரிடத்தில் ஒன்று திரட்டுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஸைது பின் சாபித் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்கள் மலைகளில் ஒன்றை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்லுமாறு எனக்கு கட்டளையிட்டிருந்தாலும் கூட அது அந்த அளவுக்கு கடினமான பணி கிடையாது. ஏனென்றால் எந்தப் பணியை எனக்கு கொடுத்தார்களோ அதாவது திருக்குர்ஆனை ஒன்று சேர்க்கும் பணி இதை விட அது இலேசானதாக இருந்திருக்கும். நான் அன்னாரிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்யாத பணியை நீங்கள் இருவரும் ஏன் செய்கின்றீர்கள்? என்று கேட்டேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! அது நல்ல பணியாகும் என்று கூறினார்கள். நான் இதையே அவரிடம் மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருந்தேன். எந்த அளவுக்கு என்றால் எந்த விஷயத்திற்காக அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரின் உள்ளங்களை திறந்தானோ அந்த விஷயத்திற்காக எனது உள்ளத்தையும் அல்லாஹ் திறந்து விட்டான். நான் எழுந்து சென்று திருக்குர்ஆனை தேட ஆரம்பித்தேன். அவற்றை தோல் காகிதங்களிலிருந்தும், தோல்பட்டை எழும்புகளிலிருந்தும், பேரீத்தம் பழ மரக்கிளைகளிலிருந்தும், மக்களின் உள்ளங்களிலிருந்தும் ஒன்று சேர்த்தேன். சூரா தவ்பாவின் இரு வசனங்களை நான் ஹஸ்ரத் ஹுஸைமா அன்ஸாரியிடத்தில் கண்டேன். அவரைத்தவிர வேறு யாரிடமும் அதை நான் காணவில்லை. அந்த வசனங்கள் இவையாகும்:

لَقَدْ جَاءَكُمْ رَسُوْلٌ مِّنْ اَنْفُسِكُمْ عَزِيْزٌ عَلَيْهِ

مَا عَنِتُّمْ حَرِيْصٌ عَلَيْكُمْ بِالْمُؤْمِنِيْنَ رَءُوْفٌ رَّحِيْمٌ

நிச்சயமாக உங்களிடம் உங்களிலிருந்தே ஒருவர் தூதராக வந்துள்ளார். உங்களுக்கு ஏற்படும் துன்பம் அவருக்கு மிகுந்த வேதனையை கொடுக்கிறது. அவர் உங்களின் நலனில் மிகுந்த ஆர்வம் கொண்டவராகவும், நம்பிக்கை கொண்டவர்களை நேசிக்கக் கூடியவராகவும், அவர்களின் மீது மிக்க கருணை காட்டக்கூடியவராகவும் இருக்கின்றார்.

ஹதீஸில் இரு வசனங்கள் என்று கூறப்பட்டுள்ளது. இங்கு ஒரு வசனம் பற்றிய குறிப்பு மட்டுமே உள்ளது. இரு வசனம் என்று எழுதப்பட்டுள்ளது. ஒருவேளை அடுத்த வசனமும் இதனுடன் இருக்கலாம்.

பிறகு அறிவிப்பில் வருகிறது. திருக்குர்ஆன் ஒன்றுதிரட்டப்பட்ட அந்த பிரதி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடத்தில் இருந்தது. எதுவரை என்றால் அல்லாஹ் அன்னாருக்கு மரணத்தையும் வழங்கி விட்டான். பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் இருந்தது. எதுவரை என்றால் அல்லாஹ் அன்னாருக்கு மரணத்தை வழங்கி விட்டான். பிறகு ஹஸ்ரத் ஹஃப்ஸா பின்த் உமர் அவர்களிடம் இருந்தது. ஏற்கனவே கூறப்பட்டதைப் போன்று பிறகு அதை அவரிடமிருந்தும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வாங்கிக் கொண்டார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுத் தஃப்ஸீர்.... ஹதீஸ் எண் 4679)

இப்போது இந்த நற்குறிப்பு தொடரும். இனி வரும் காலங்களில் எடுத்துக் கூறப்படும். இன்ஷா அல்லாஹ்.

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மத்)

......☆......☆......☆......

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

என்ற அல்லாஹ்வின் இந்த கருணையை ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தனது வேதனை மற்றும் துன்பத்தின் உணர்வுகளின் மீது மேலோங்கச் செய்து விட்டார்கள். தியாகம் செய்த பிறகும் தனது தியாகத்திற்கு எந்த உண்மைத்துவமும் இல்லை என்ற எண்ணத்தை தனது உள்ளத்திலும் மூளையிலும் அன்னார் மேலோங்கச் செய்தார்கள். மாறாக, இது அல்லாஹ்வின் கருணையாகும். அவனே என்னை இந்த தியாகத்திற்கு தகுதியுடையவனாக கருதினான் என்று அன்னார் எண்ணினார்கள்.

எனவே எல்லா தியாகங்களுக்கும் நாங்கள் ஆயத்தமாக இருக்கின்றோம் என்று நாம் உடன்படிக்கை செய்யும்போது நமது தியாகத்திற்கு எந்த அந்தஸ்தும் இல்லை என்ற எண்ணத்தை நமது உள்ளத்திலும் மூளையிலும் மேலோங்கச் செய்வதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் நம்மிடமிருந்து ஒரு தியாகத்தை பெற்றுக் கொண்டால் அதன் விளைவாக இறைவனின் நெருக்கம் வழங்கப்படுமென்றால் அது அல்லாஹ்வின் கருணையாகும். அவன் நமக்கு அதற்கான நற்பேறு வழங்கியுள்ளான்.

ஒரு முறை மட்டுமே அல்லாஹ்வின் அருட்களிலிருந்தும், கருணையிலிருந்தும் பயன் பெறுபவர்களாக இருக்கக்கூடாது. மாறாக, அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுவதற்கான ஆசை மற்றும் அதற்கான முயற்சி என்பது வாழ்வின் நிரந்தர அங்கமாக ஆகிவிட வேண்டும். அப்போதுதான் நாம் நமது உடன்படிக்கையை முழுமை செய்ய முயற்சி செய்பவர்களாவோம் என்று நம்மால் கூற முடியும். மேலும் இதன் விளைவாக இந்த நன்மைகளின் தாக்கம் தொடர்ந்து அடுத்தடுத்த தலைமுறைகளில் தென்பட்டுக் கொண்டே இருக்கும். இறைவனுடைய திருப்தியைப் பெறுவதும் அவனது நெருக்கத்தை அடைவதும் நமது வாழ்வின் நோக்கமாகும் என்ற புரிதல் மனைவி மக்களுக்கும் ஏற்பட வேண்டும். இந்த சூழலை குடும்பங்களில் உருவாக்குவதற்கு துஆக்கள் மற்றும் செயல் அவசியமாகும். அல்லாஹ் பெண்ணை அந்த தியாகத்தில் பங்கு பெறச்செய்து பெண்களுக்கும் கூட ஒரு முன்னுதாரத்தை நிலைநாட்டி விட்டான். அதாவது நல்ல பெண்மணி அல்லாஹ்வின் மீது நிச்சய உறுதி கொள்கின்றார். அவன் முன்னால் அவள் குனிகின்றாள். மேலும் அவனது நெருக்கத்தை பெறுகின்றார் என்றால் இறைவனும் அவளை கைவிடுவதில்லை. அந்த வகையில் நாம் பார்க்கின்றோம். கத்தியால் அறுபடுவததையும் விட பெரிய தியாகத்தை செய்வதற்கு கணவன், மனைவி மற்றும் மகன் உட்பட முழு குடும்பத்திடமும் இறைவன் கூறினான்.

பின்னர் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் ஹஸ்ரத் ஹாஜிரா (அலை) மற்றும் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) ஆகியோரை அழைத்துக் கொண்டு ஓர் இடத்திற்கு சென்றார்கள். அங்கு பல மைல் தொலைவு வரை எந்த மக்களும் வசிக்கவில்லை. மாறாக, அது வனாந்தரமாக இருந்தது. அங்கு தண்ணீரும் இருக்கவில்லை. உணவுக்கான எந்த ஏற்பாடும் இல்லை. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தனது மனைவிக்கும், மகனுக்கும் தண்ணீர் குடம் ஒன்றையும், பேரீத்தம் பழங்கள் கொண்ட பை ஒன்றையும் கொடுத்து அந்த இடத்தில் அவர்களை விட்டு விட்டார்கள். இந்த குடத்திலுள்ள தண்ணீர் தீர்ந்து விட்ட பிறகும், பையிலுள்ள பேரீத்தம் பழங்கள் தீர்ந்து விட்ட பிறகும் அவர்களுக்கு தண்ணீரும் கிடைக்காது; உண்பதற்கு எந்த உணவும் கிடைக்காது என்பதை ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் அறிந்திருந்தார்கள். அதன் பிறகு எனது மனைவியும், மகனும் எப்படி வாழ்வை கழிக்க முடியும் என்பதையும் அன்னார் அறிந்திருந்தார்கள். ஆனால் அவ்வாறு தியாகம் செய்வது அல்லாஹ்வின் கட்டளையாக இருந்தது. எனவே அல்லாஹ்வின் திருப்திக்காக இந்த தியாகத்தை அன்னார் செய்து கொண்டிருந்தார்கள்.

வெளிப்படையாக பார்க்கின்றபோது அந்த வனாந்திரத்தில் கையிலிந்த தண்ணீர் தீர்ந்தவுடன் வேறு தண்ணீர் கிடைப்பது என்பதும், அல்லது குறைந்தபட்சம் அனுதாபம் காட்டுவதற்காக ஒரு அனுதாபி கிடைத்து விடுவதென்பதும் வெளிப்படையில் அங்கு சாத்தியமற்ற ஒன்றாக இருந்தது. ஹஸ்ரத் ஹாஜிரா (அலை) அவர்களுக்கு அல்லாஹ்வின் மீதான நிச்சய உறுதியின் தரம் உயர்தரமானதாக இருந்தது. எனவே அன்னார் அச்சமின்றி, இது இறைவனுடைய கட்டளை என்றால் பிறகு எனக்கு எந்தக் கவலையும் இல்லை என்று கூறினார்கள். நிச்சயமாக இது இறைவனுடைய கட்டளை என்றால் பின்னர் அவன் எம்மை ஒருபோதும் வீணாக்க மாட்டான் என்ற ஹஸ்ரத் ஹாஜிரா (அலை) அவர்களின் இந்த சொற்களை அர்ஷின் இறைவன் கேட்டிருப்பான்.

எனவே இறைவனும் நிச்சயமாக நான் உம்மையும், உமது மகனையும் ஒருபோதும் வீணாக்க மாட்டேன் என்று கூறியிருப்பான். பிற்காலத்தின் சூழல்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கப்பட்டிருந்ததைப்போன்றே அவன் செய்தான் என்பதை எடுத்துரைக்கின்றன. இன்னும் சொல்வதென்றால், இறைவன் அவர்களை வீணாக்குவதிலிருந்து மட்டும் பாதுகாக்கவில்லை. மாறாக, அவர்கள் மூலமாக ஒரு பெரும் சமுதாயத்தை தோற்றுவித்தான். அதில் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைப் போன்ற மாபெரும் அந்தஸ்து பெற்ற நபி தோன்றினார்கள். அன்னார் முழு உலகத்திற்காகவும் தோன்றிார்கள். அன்னாரே முழு உலகத்தின் ஆன்மீக அரசராக இருக்கின்றார்கள். இனி இறைவன் வரை அடைவது கூட அன்னாரின் மூலமாகவே நடைபெறும்.

ஹஸ்ரத் ஹாஜிரா (அலை) மற்றும் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்கள் இறைவனுக்காக உலகத்தை விட்டு விட்டார்கள். அதனால் அல்லாஹ் முழு உலகத்தையும் ஹஸ்ரத் இஸ்லாமீல் (அலை) அவர்களின் சந்ததிகளின் பாதங்களின்கீழ் கொண்டு வந்து விட்டான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக இன்று லட்சக்கணக்கான மற்றும் கோடிக்கணக்கான மக்கள் ஹஜ் மற்றும் உம்ரா செய்கின்றார்கள் என்றால் ஹஸ்ரத் ஹாஜிரா (அலை) அவர்களின் தியாகத்தின் நினைவையும் புதுப்பித்துக் கொள்கின்றார்கள். எனவே ஹஸ்ரத் ஹாஜிரா (அலை) அவர்களின் இந்த தியாகத்திற்கு கியாமத் வரை இறைவன் ஓர் அந்தஸ்தை வழங்கினான். மேலும் ஒரு கண்ணியத்தையும் வழங்கினான்.

எனவே இன்றைய நாளானது அந்த குடும்பத்திற்கு அல்லாஹ்வின் மீது இருந்த நிச்சய உறுதியையும், அவர்களின் தியாகத்தின் உன்னத தரத்தையும் நினைவூட்டக்கூடியதாக உள்ளது. எனவே எல்லோரையும் விட முதலில் ஆண்கள் தனது சிந்தனைகளையும், தனது தியாகத்தின் தரத்தையும் உயர்த்திக் கொள்ளவது அவசியமாகும். பெண்கள் மற்றும் பிள்ளைகளின் அல்லாஹ்வின் மீதான தவக்குல் மற்றும் தியாகத்தின் தரத்தை உயர்த்த வேண்டுமென்றால் எல்லா நிலையிலும் ஆண்கள் தனது முன்னுதாரணத்தை காட்ட வேண்டும். தன்னுள் சாதாரண மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக மட்டும்தான் இந்த முன்னுதாரணங்கள் என்று எண்ணக்கூடாது. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் சம்பவங்களை வெறும் கதைகளாக அல்லாஹ் அதனை பாதுகாத்து வைக்கவில்லை. மாறாக, இந்த முன்னுதாரணங்கள் நமக்கான முன்மாதிரிகளாகும். ஒவ்வொரு ஆணும் இப்ராஹீமின் முன்னுதாரணங்களின்படி செயல்பட முயற்சி செய்தால், மேலும் அதன்படி நடந்தால் பின்னர் அவர் நன்றியுணர்வின் தரத்தையும் உயர்த்திக் கொள்ள முயற்சி செய்வார். ஒவ்வொரு பெண்ணும் ஹஸ்ரத் ஹாஜிரா அவர்களின் முன்னுதாரணத்தை பின்பற்ற ஆயத்தமாகிவிடும்போதும், ஒவ்வொரு இளைஞனும் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களின் முன்னுதாரணத்தை பின்பற்றி நடக்க ஆயத்தமாகிவிடும்போது பின்னர் அல்லாஹ்வின் அருள் மழை பொழியும்.

அல்லாஹ் நம்மிடத்தில் உண்மையான தியாகத்தின் உயிரோட்டத்தை ஏற்படுத்துவானாக. நாம் எப்போதும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவர்களாக திகழ்வோமாக. வரக்கூடிய ஒவ்வொரு தியாகப் பெருநாளும் நமக்கு இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்கான புதிய படித்தரங்களை காட்டக்கூடியதாக இருக்கட்டுமாக. இவ்வுலகம் மற்றும் மறு உலகில் பரக்கத்துகளையும், அருட்களையும் பெற்றுத்தரக்கூடிய, ஒப்புக் கொள்ளக்கூடிய குர்பானிகளை செய்யக்கூடியவர்களாக நாம் திகழ்ந்து கொண்டே செல்ல வேண்டும். ஆமீன்.

......☆......☆......☆......

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 15 July 2021 Issue No. 28

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாயிலில் 31 ஜுலை 2020** ஆம் ஆண்டு ஆற்றிய **ஈதுல் அழ்ஹா பெருநாள் குத்பா**

தஷஹ்ஹுத், தஅவ்வுஸ் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இன்று தியாகப் பெருநாள் என்று அழைக்கப்படக்கூடிய ஈதுல் அழ்ஹா ஆகும். அனைத்து முஸ்லிம்களும் உலகில் இதனை மிக ஆர்வமுடன் கொண்டாடுகின்றனர். இன்றும், சில இடங்களில் நேரத்தின் வேறுபாட்டின் காரணமாக நாளையும் கொண்டாடப்படுகின்றது. நான்காயிரம் ஆண்டுகளுக்கும் முன்பு நிகழ்ந்த அந்த தியாகத்தின் நினைவை புதுப்பிக்கும் வகையில் அல்லது அந்த சம்பவத்தின் நினைவை புதுப்பிப்பதற்காகவும் முஸ்லிம்கள் இஸ்லாத்தின் ஆரம்பம் முதல் தியாகத்தின் பெருநாளாக கொண்டாடி வருகின்றனர்.

இத்தனை ஆண்டு காலம் கழிந்த பின்னரும் ஒரு நம்பிக்கையாளரின் உள்ளத்தில் அந்த தியாகத்தின் முக்கியத்துவமும், நினைவும் சிறிது கூட குறையவில்லை. பொதுவாக மனிதன் தனது அந்த துன்பம் மற்றும் கஷ்டத்திலிருந்து வெளியேறிய சிறிது காலத்திற்குப் பிறகு அதனை மறந்து விடுகின்றான். எந்த துன்பம் அல்லது கஷ்டத்தை கடந்தோம் என்பது அவனுக்கு நினைவில் இருப்பதில்லை. பின்னர் மீண்டும் அவன் உலகில் மும்முரமாகி விடுகின்றான். ஆனால் இந்த சம்பவத்தை இறைவன் திருக்குர்ஆனில் பாதுகாத்து தியாகத்தின் ஒரு தரத்தை நிரந்தரமாக நிலைநாட்டி விட்டான். பின்னர் ஒரு நம்பிக்கையாளர் அந்த தியாகத்தை எப்பொழுதும் தன் கண்முன் நிறுத்த வேண்டும் என்று வழிகாட்டல் வழங்கி ஒரு நம்பிக்கையாளருக்கும் முஸ்லிமிற்கும் அதன் நினைவை கியாமத் வரை நிலைநாட்டி விட்டான். எத்துனை உயர் தரமான சம்பவம்? இன்றும் நாம் அந்த சம்பவத்தை கேட்கின்றபோதும் அதனை சீர்தூக்கிப் பார்க்கும்போதும் (நமது) உள்ளம் உணர்வுகளால் நிறைந்து விடுகிறது.

இது சாதாரண விஷயம அல்ல. அதாவது ஒரு நபருக்கு முதுமையில் பிள்ளை பிறக்கின்றது. அவரது வயது அப்போது 90 வயதாக இருக்கின்றது. அல்லது அதற்கு சற்று ஏறக்குறைய உள்ளது. அப்போது கனவில் இறைவன் புறமிருந்து கட்டளை வருகின்றது. நீர் உமது மகனை பலியிடுவீராக. மேலும் அவர் அந்த கட்டளையின் வெளிப்படையான பொருளை எடுத்துக் கொண்டு அவர் தனது ஒரே மகனை பலியிடுவதற்காக ஆயத்தமாகி விடுகின்றார். அல்லாஹ்வின் திருப்தி மற்றும் அவனது கட்டளைக்கு முன்பு முற்றிலும் சிரம் பணிந்து விடுகின்ற இந்த தரம் எத்துனை உயர்தரமானது? மேலும் எவ்வளவு மிக உயர்ந்த அந்தஸ்தை உடையதாக இருக்கின்றது! ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தனது மகனை கிடத்தி பின்னர் கத்தியால் பலியிடுவதற்கு ஆயத்தமாகின்றார்கள். பின்னர் தந்தை மட்டும் அந்த தியாகத்திற்கு தயாராகவில்லை. அவருக்கு ஓர் ஆன்மீக அந்தஸ்து இருந்தது. அவர் தந்தையாக இருந்தார். மேலும் அவர் அல்லாஹ்வின் நெருக்கத்தில் மிக உயர்தரமான இடத்தை அடைந்திருந்தார் என்ற அடிப்படையில் மட்டும் அந்த தியாகத்தை செய்ய அவர் முற்படவில்லை. மாறாக, நான் பலியிடப்படுவது இறைவனது கட்டளை என்றால் பின்னர் நான் ஆயத்தமாக இருக்கின்றேன் என்று அவரது மகனும் சிறுவனாக இருந்தபோதிலும் இந்த விஷயத்தை முற்றிலும் ஒப்புக் கொண்டார். அந்த சிறுவனின் பதிலையும் அல்லாஹ் திருக்குர்ஆனில் பாதுகாத்து இருக்கின்றான். அந்த சிறுவனின் பதில் இதுவாகும். அதாவது எனது தந்தையே! இறைவன் என்ன கூறினானோ அதனையே நீர் செய்வீராக. சதஜிதுனி இன்ஷா அல்லாஹ் மினஸ் ஸாபிரீன் அவ்வாறு செய்தால் இன்ஷா அல்லாஹ் என்னை நீர் எனது ஈமானில் நிலைபெறக்கூடியவனாகவும் பொறுமை செய்யக்கூடியவனாகவும் காண்பீர். குர்பானி கொடுப்பவர்களுக்கும், மகிழ்ச்சியுடன் குர்பானி கொடுப்பவர்களுக்கும் மற்றும் அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை கொள்ளக் கூடியவர்களுக்கும் இந்த பதில் ஒரு முன்னுதாரணமானதாக ஆகிவிட்டது. இளைஞர்களுக்கும் கூறப்பட்டுள்ளது. இறைவன் மீது முழுமையான நம்பிக்கை கொள்ளக்கூடிய மற்றும் தியாகத்திற்காக ஆயத்தமாகக்கூடியவர்களின் தரம் மற்றும் பதில் இவ்வாறு இருக்க வேண்டும் என்று போதிக்கப்பட்டுள்ளது.

நாம் ஆய்வு செய்து பார்த்தால், இந்த பதிலிலிருந்து தாக்கத்திற்கு உள்ளாகாதவர் எவருமே இருக்க மாட்டார் என்பது தெரிய வரும். முதியவர்களுக்கு தியாகம் செய்வதற்கான முன்னுதாரணத்தை 90 வயதான முதியவர் நிலைநாட்டியுள்ளார். சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான முன்னுதாரணத்தை ஒரு சிறுவன் நிலைநாட்டியுள்ளான். எனவே நிச்சயமாக நாம் இந்த சம்பவத்தை கேட்கும்போதும், படிக்கும்போதும் நாம் உணர்வுகளால் நிறைந்து விடுகின்றோம். பெரும்பாலானவர்களின் கண்கள் கண்ணீரால் நிறைந்து விடுகின்றன. ஆயினும் நமக்கு இது மட்டுமே போதுமானதல்ல. மாறாக, அத்துடன் நாம் செய்த உடன்படிக்கையையும் ஆய்வு செய்ய வேண்டும். அதாவது எல்லா தியாகங்களுக்கும் நான் ஆயத்தமாக இருப்பேன் என்ற உடன்படிக்கையை நாம் ஆய்வு செய்வது அவசியமாகும்.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் சிறப்பான பண்பாக குறிப்பிட்டு திருக்குர்ஆனில் அதை பதிவு செய்து விட்டான். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களைப் பற்றி அவர் மென்மையானவராகவும், பரிவு கொண்டவராகவும் இருந்தார் என்று இறைவன் கூறுகின்றான். அவரது உள்ளம் மிகவும் மென்மையானதாக இருந்தது. உள்ளம் கருணையால் நிறைந்திருந்தது. அவரது உள்ளத்தின் நிலை இவ்வாறு இருக்கின்றபோது தனது மகனுக்காக அவரது உள்ளத்தில் வேதனை ஏற்பட்டிருக்காதா? நிச்சயமாக ஏற்பட்டிருக்கும். ஆனால் அந்த நேரத்தில் தனது சொந்த துன்பம் மற்றும் நேசத்தை ஒருபுறம் வைத்துவிட்டு அவர் அல்லாஹ்வின் திருப்தி மற்றும் நேசத்திற்கு மட்டும் மற்ற எல்லா விஷயங்களையும் விட முன்னுரிமை வழங்கினார்.

இந்த விஷயம்தான் அவரை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்தி தனித்தன்மை வாய்ந்தவராக ஆக்கியுள்ளது. அல்லாஹ்வின் மீதான நன்றியுணர்வு, நேசம் மற்றும் தியாகம் செய்வதற்கான இந்த தரம் ஆகியவற்றின் காரணமாக கியாமத் வரை முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது சலவாத் ஓதும்போது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் நினைவும் நிச்சயம் கூறப்படும். மேலும் இது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் குர்பானி மட்டுமல்ல. மாறாக, மன மகிழ்ச்சியுடன் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களும் தியாகம் செய்வதற்கு ஆயத்தமாக இருந்தார்கள். அவர் ஏன் இந்த தியாகத்திற்காக ஆயத்தமானார்? ஏனென்றால் அவருக்கு அல்லாஹ்வின் மீதான நேசத்தின் சிறப்பான புரிதல் இருந்தது. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாகத்தை அல்லாஹ் ஒரு தனித்தன்மை வாய்ந்த அடையாளமாக ஆக்கி விட்டான். ஏனென்றால் அல்லாஹ் என்னை இந்த தியாகத்திற்காக தேர்ந்தெடுத்திருக்கின்றான்

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad